REGD 4642

# திராவிடநாடு

இலங்கை 15 சதம் ] விலை அணா இரண்டு [ மலாய்நாடு 12 காசு

மலர் 9 | 9–7–50 | இதழ் 2




போர்க்கொந்தளிப்பு, 'ஐ. நா. சபையை' அழித்துவிடும் அளவில் எழும்பியிருக்கிறது! ஆனால், இந்திய சர்க்காரோ 'ஐ. நா. சபையின் கௌரவத்தைக் காக்கப் போவதாகக் கூறிக்கொண்டு போர் அலையில் பாய்கிறது! நேருசர்க்கார், தென்கொரியாவுக்கு ராணுவ உதவியளிக்கும்' தீர்மானத்தை ஆதரித்திருக்கிறது!!

மதுரை, ஜூன் 27 — தமது மந்திர சக்தியினால், கரன்ஸி நோட்டுகளை இரு மடங்காக்கிட முடியும் என்று பொதுமக்களை ஏமாற்றி வந்ததாக 23 பேர்மீது வழக்கு தொடரப்பட்டு நடந்து வருகிறது.

★

எத்தன்

# திருவிளையாடல்!

★

### காட்சி 1.

காலம்:- இரவு

இடம்:- மளிகை மண்டி.

இருப்போர்:- முதலாளி மன்னார் சாமி செட்டியார், கணக்கப்பிள்ளை கண்ணுசாமி.

மன்னார்சாமி செட்டியார்:— பூட்டைச் சரியாய் இழுத்துப் பாரும்.

கண்ணுசாமி:- பூட்டிவிட்டு மூணுதடவை பலமாய் குலுக்கிப் பாத்தாச்சுங்க!

[செட்டியார் இருள் சூழ்ந்த சாலையில் நடந்தபடியே பேசலானார்]

ம:- ஏனய்யா, கணக்கப்பிள்ளை, ஊரிலே யாரோ சாமியார் வந்திருக்கிறாராமே...நீர்போய்ப் பார்த்தீரா?

க:- சாமியாரைப் பார்த்துட்டா சாப்பாடு கிடைச்சுடுங்களா?

ம:- ஓய், அவரைப்பத்தி ஊரே, புகழுது-கூட்டம் தினம் ஜேஜேன்னு நிக்குதாம்!

க:- பைத்தியக்காரனைச் சுத்திப் பத்துபேர், பணக்காரனைச்சுத்தி...

[வாய்தவறி வந்துவிட்ட வார்த்தைகளை மென்று விழுங்கினான் கணக்கப் பிள்ளை]

ம:- ரொம்பச் சக்திவாய்ந்தவர்னு சொல்றாங்களே!

க:- எனக்கென்னமோ இந்த மாதிரி ஆசாமிகளைக் கண்டாலே பிடிக்கறதில்லேங்க! களவாணிப் பசங்க, கொலைபண்ணினவனுவ, சிறையிலிருந்து தப்பிச்சு வந்தவங்க, எல்லாம் காவியைக் கட்டிகிட்டு, ஓம் நமசிவாயம் போட்டு ஊரை ஏமாத்திருனுவங்க — அவன்களைப் பற்றி ஏன் வீணாப் பேசிக்கிட்டு...!

ம:- என்னய்யா, ஒரேயடியாய் வாயாட்றீர்! கொஞ்சம் சாமியாரைத் தெரிஞ்சுக்கலாம்னு பார்த்தா பிடி கொடுக்காமலே வளவளன்னு கொட்டியளக்கிறீர்

[சீறினார் செட்டியார் கணக்கப்பிள்ளை பல்லைக்காட்டினார்]

க:- மன்னிக்கணுங்க.......அகாலமாயிட்டுதுங்களே! நாளைக்கு வேணுமானா எல்லாம் தெரிஞ்சுகிட்டு வந்துட்றேனுங்க!

[கணக்கப்பிள்ளையை அருகில் அழைத்து, குரலை தாழ்த்திப் பேசினார் செட்டியார்]

ம:- ஓய், அந்தச் சாமியார் புது நோட்டுகளையே உண்டாக்கித் தர்ராரேமே!

க:- எனக்குச் சரியா தெரியலீங்க ......அங்கே தடித்தடியாச் சீடர்கள் இருபத்திரண்டு பேருக்கு இருக்கிறாங்க. அவங்களிலே யாரையாவது கூட்டிக்கிட்டே வந்துடறேன். எல்லாம் நேருக்காப்பேசி முடித்துடுவோம்!

[செட்டியார் வீட்டிற்குத் திரும்பும் தெரு வந்துவிடவே, அவர் போய்விடுகிறார். கணக்கப்பிள்ளை தனியாய் நடக்கிறான்]

க:- பணத்தாசை பிடிச்சு அலையறான்......இருக்கிற பணம் இன்னும் எட்டுத் தலைமுறைக்குப் போதுமே! புது நோட்டுப் போடணுமாம்...... பைத்யக்கார மனிசன்!

[அவன் வீட்டையடைகிறான்]

### காட்சி 2.

காலம்:- விடியற்காலை

இடம்:- ஆற்றங்கரை.

இருப்போர்:- கணக்கப்பிள்ளை கண்ணுசாமி, சீடன் வாயளப்பன், மன்னார்சாமி செட்டியார்.

[சீடன் வாயளப்புச்சாமிகள் குளித்து முடித்துவிட்டுச் கரையேறுவதை கண்டுவிடுகிறான் கண்ணுசாமி]

க:- சாமி, உங்களோடு தனித்து பேசணும்.

சீ:- பக்தா, பயம் வேண்டாம் எதையும் என்னிடம் கேட்கலாம்.

க:- உங்கள் குரு......

சீ:- மண்ணுலகில் இதுவரை எ... ரும் பெறாத மகத்துவம் பெற்ற மகான்.

க:- அவர்...

சீ:- தீராத வல்வினைகளைத் தீர்த்திடுவார். போகாத நோய்களை போக்கிடுவார்.

க:- அது மட்டுமா?

சீ:- ஆயிரம் உண்டு சொல்ல நேரமில்லையே, அவர் பிரதா... முழுவதும் எடுத்துச் சொ... குருசாமிகளின் பார்வை விசே... தால் ஊனர் நிமிர்ந்து நடப்... குருடர்கள், அவரின் விபூதி மகி... யால் விழி பெற்று மகிழ்வர். அ... ரின் செஞ்சொல் மாயத்தால் செ... டரும் செவி திருந்தி இசையரு... இன்புறுவர்.

க:- அப்புறம்...

சீ:- பில்லி சூனியம் எடுப்ப... பிள்ளை வரமும் தருவார்.

க:- ஹும்...

சீ:- செம்பைச் செம்பொன்னாக்கு வார். கருங்கல்லை வைரமாக்குவார்.

க:- ஆக்குவாருங்களா?

சீ:- சந்தேகம் ஏதுக்கு முருகா!

க:- அதுக்கில்லீங்க, பழைய நோட்டுக் கொடுத்தால், அதைப் போல ஒரு மடங்கு புது நோட்டு கள்......

சீ:- பக்தா, நீ புத்திசாலி—மகா புத்திசாலி' சொல்ல வந்ததை ஏன் நிறுத்துகிறாய். உண்மையைக் கூறத் தயங்காதே! எம் குரு மகானின் சக்தி உலகறிந்ததாயிற்றே...அவர் நினைத்தால் புது நோட்டு என்ன, கண்டவர் நடுங்கிடும் கோட்டையையே கட்டிக் காட்டுவார், கண்மூடிக் கண் திறப்பதற்குள்!

க:- கொஞ்சம் தயை புரியணும்......

சீ:- கருணை செய்வதற்காகவே கடவுள் அனுப்பிய தூதுவர்கள் நாங்கள்-தயை தர என்ன தயக்கம்? — தாராளமாகக் கேள் — தயக்கமில்லாமல் கேட்டவரம் கிடைக்கும்.

க:- என்னுடன் என் முதலாளி மளிகை மண்டி மன்னார்சாமி செட்டியார் வீடுவரை...

சீ:- கார் இருந்தாலும் சரி, கட்டை மாட்டு வண்டி கிடைத்தாலும் சரி, இல்லை, கால்நடையே போவதானாலும் தடையில்லை, பக்தா, வா.

[செட்டியார் வீட்டை யடைந்ததும் கணக்கப் பிள்ளை அவசர அவசரமாக உள்ளே போய் விஷயத்தைச் சொல்கிறான். அவர் ஓடோடி வந்து வரவேற்கிறார்.]

ம:- சாமிகள் வரணும், வரணும்!

சீ:- எல்லா நன்மையும் பெருகட்டும்!

ம:- இப்படி அமருங்கள். கணக்கப்பிள்ளை, பால் கொண்டு வா, சுவாமிகளுக்குப்பழம் வேண்டுமானாலும் கொடு, பலகாரங்கள் விரும்பினாலும் வாங்கியாந்துடு!

[தட்டு நிறைய இட்டலி, தோசை, கனிவகைகள், செம்பு நிறையப் பால் கொண்டு வருகிறான் கண்ணுசாமி. திண்ணு தீர்த்துக் கட்டிவிட்டு ஏப்பம் விடுகிறான் சீடன்]

ம:- சுவாமி...

சீ:- வார்த்தைகளை வளர்த்தாமல் கேள்...உனக்கு நோட்டுகள் இரட்டிக்கும் வரம் தரவேண்டும் குரு சுவாமிகள். அவ்வளவுதானே!

ம:- இரத்தினச் சுருக்கமான பேச்சு!

சீ:- அப்படியானால் நாளை பூஜா பொருள்களுடன் உமக்கு எவ்வளவு நோட்டுகளுக்கு இரட்டிப்பாக நோட்டுகள் தேவையாகிறதோ அவ்வளவையும் ஒரு பட்டுப் பையில் போட்டுக் கட்டிக்கொண்டு வந்து விடு.

ம:- ஆகட்டுங்க.

சீ:- அப்படியானால் நான் போய் வருகிறேன். உங்கள் ஆள்வசம் சிட தட்சணையும் கொடுத்தனுப்புங்க... குரு மகாசரிடம் சொல்லிப் பார்க்கிறேன்.

[கணக்கப்பிள்ளை பின் வர சீடன் செல்கிறான் வெளியே.]

## காட்சி 3

| |
|---|
| காலம்:— மாலை |
| இடம்:— 'டபுள்' சாமியார் ஆசிரமம் |
| இருப்போர்:— சாமியார், சீடன் வாயளப்பன், கண்ணுசாமி, மன்னார்சாமி செட்டியார், |

சீ:- செட்டியாரே, சொன்ன ஏற்பாடுகளுடன் வந்துவிட்டீரா?

ம:- ஒண்ணுகூட விடாமே, சொல்லியனுப்பிய பட்டியல்படி பூசை சாமான்கள் வந்தாச்சு......

சீ:- (மெதுவான குரலில்) பண நோட்டுகள்.......

ம:- இருக்குதுங்க, இருபதினாயிரம்...

சீ:-குருஜீசாமான்யமானவரென்று நினைக்கவேண்டாம். அவர் இரட்டையாக்கும் முறையிலே கைவந்தவர். இவர் தயவால் இன்று எத்தனையோ பேர் எட்டடுக்கு மாடி கட்டி வாழ்கிறார்கள். ஆனால் அவர் மகான், மண் குடிசையிலே தான் வாழ்கிறார். இவர் மனம் வைத்தால் வானத்தைக் கூரையாக்கி, மேகங்களைச் சுவராக்கி, மின்னலை மின்சார விளக்குகளாக்கி வாயுவை நகரும் நகரம் போன்ற 'பாண்டியாக்'காக்கிட முடியும்!

க:- மணியாவுதுங்களே — வேளை தவறிவிட்டால் காரியம் கரியாய் விடப்போவுது.

சீ:- பக்தா, பதறாதே! நாழி, சட்சத்திரம் நானறியாதவை அல்ல. மகானின் மகத்துவத்தைப்பாரும் குருஜிக்கு பெயரே 'டபுள்' சாமியார் என்பதுதான். இந்த மாதிரி கொடுக்கும் செல்வத்தை இரண்டு பங்காக்கித் தந்தே இப்படிச் சிறப்புப் பெயர்!

க:- 'டகுல்' சாமியாரா?

ம:- ஒப், மகா பைத்தியம்—சாமி 'டபுள்' என்கிறார்—நீர் 'டகுல்' என்று உளறுகிறீர், இங்கிலீசுலே இரண்டு என்று அர்த்தப்படும்.

சீ:- செட்டியாரே, அதோ பூஜை அறை...போம் உள்ளே!

[வத்திமணம் கம்மென்று வீசிக்கொண்டிருக்கிறது. உள்ளே நுழைந்து சென்றவுடன் சாமியார் கண்களைத் திறக்கிறார்]

சாமியார்: பக்தா,உன் கோரிக்கை?

ம: கொண்டு வந்திருக்கும் இந்தப் பண மூட்டையை இரண்டு மடங்காக்கி என்னை இரட்சிக்கவேண்டும், சுவாமி!

சா:- அப்படியா? மூட்டையை இங்கே வை. அரைமணி நேரம் வெளியில் காத்திரு. அழைப்பு வந்தவுடன் எடுத்துபோ! பதினைந்து தினங்கள் பூஜை செய்து, பிறகு பிரித்துப் பார். ஆச்சரியப்படுவாய்! என்னைத் தேடி ஓடிவருவாய். குதிப்பாய், கூத்தாடுவாய். ஆனால் உன் பாவங்கள் ஏதாவது திருவிளையாடல் செய்துவிடுமோ, என்னமோ!

ம:- பாவமா...

சா:- நீ பாவியல்ல, பக்தா! உன்னைச் சுற்றியிருப்பவர்கள் செய்தாலும் உன்னைச் சூழுமே!

ம:- அப்படியானால்...

சா:- பயப்படாதே, பக்தா! போ, வெளியே! பொறுத்திருந்து பார், சிரித்துக்கொண்டு இரு, சிறிது நேரம்—நான் பிறகு அழைக்கிறேன்.

[செட்டியார் வெளியில் வரவே, சீடன் உள்ளே போகிறான். கணக்கப்

பிள்ளை இந்தக் காட்சியை வேடிக்கைப் பார்க்கிறான். பிறகு......]

சி:- செட்டியாரே, வாரும், உமது பண மூட்டையை எடுத்துப்போம். அடுத்த பதினைந்தாம் நாள் நினைத்தது நடக்கும்.

ம: வர்ரேனுங்க.

[செட்டியாரும், கண்ணுசாமியும் நடந்து செல்கின்றனர்: சீடன் விழுந்து விழுந்து சிரிக்கிறான்.]

## காட்சி 4

காலம்—நள்ளிரவு.
இடம்—மன்னார்சாமி வீடு.
இருப்போர்—மன்னார்சாமி, கண்ணுசாமி, சாமியார், சீடன்.

[செட்டியாரின் அவசரம் அவரை ஆட்டி வைத்தது. ஆகவே பதினைந்தாம்நாள் இரவே அந்த மூட்டையை அவிழ்த்துப்பார்க்கிறார். திருதிருவென விழிக்கிறார். வாயிலும், வயிற்றிலும் அறைந்துகொள்கிறார். பக்கத்தறையில் படுத்துறங்கும் மனைவி விழித்துக்கொள்கிறாளோ என்று கூச்சலை நிறுத்திவிட்டு, கூடத்தைத் தாண்டி, வெளியில் வருகிறார். கணக்கப்பிள்ளை உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.]

க: என்னங்க, இருந்துதுங்களா?

ம: என்னய்யா, இருந்தது மண்ணாங்கட்டி......களவாணிப் பயலுங்க ஏமாத்திட்டானுவ. அத்தனையும் போச்சு! வெறும் வெள்ளைக் கடுதாசு கட்டுங்க!

க: ஐயையோ!

ம: வாரும்என்னோடு, அந்தத் திருட்டுப்பயல்களைப் போய்ப் பார்ப்போம்!

[இருவரும் ஓட்டமும் நடையுமாக அந்த இடத்திற்கு ஓடுகின்றனர். ஒருவரையும் காணவில்லை. உள்ளே நுழைகின்றனர். சாமியாரும், வாயளப்பனும் கஞ்சாவைச் சுவைத்துக் கொண்டிருக்கின்றனர்.]

சி: ஓய், கத்தாதீர்..........என்ன வேணும்!

ம: என் பணம் கொஞ்சத்தை எடுத்துகிட்டு மிச்சத்தையாவது கொடுத்திடுங்கடா, பாவி மகனுங்களா?

சா: அதிகம் பேசாதீர்......அழையாமல் தானே வந்தீர்! நான் கேட்கவில்லை...நீரேதந்தீர்.....நான் ஏமாற்றவில்லை....ஆனால், நீர்ஏமாந்துவிட்டீர்!

ம: போலிசுலே சொல்லி.........

சி: போலீஸ் ஸ்டேஷன் இங்கே இல்லை.

ம: அட, களவாணி பசங்களா......

[செட்டியார் சோர்ந்து விழுகிறார்]

க: நான் அப்பவே சொன்னேனுங்களே!

[அப்பொழுது போலீஸ் என்று சத்தம் கேட்கிறது அந்தச் சாமியாரும், சீடனும் அசையவில்லை, கஞ்சாவை மேலும் உறிஞ்சியபடியே இருந்தனர். செட்டியாரும் கண்ணுசாமியும் ஓட வழி பார்த்தனர்.]

✻

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வதா? பசியா வரந்தாரும் பெம்மானே என்று பாடிக்கிடப்பதா?

காகித திட்டங்கள் போடுவது — அதுவும் இம்மாதிரிக் கவைக்குதவாத திட்டங்கள் — உடனடியாகப் பலன்தரும் திட்டங்கள் எதற்குமே பணமில்லையே என்ற பல்லவி! — இரண்டு கோடி மரங்கள் நட, சர்க்கார் செலவில் வாத்திய முழக்கம், வாணவேடிக்கை, உற்சவாதிகள்! நிழலாட்டம் போடும், எதிர்காலத்தை எண்ணித் திட்டம்! கற்பனைக்கும் எட்டாத வெற்றிக்கு செலவு—ஆர்ப்பாட்டம்—கூட்டம் — கும்மாளம்! ஆறுமாதத்திற்கு ஒரு சீதா கல்யாணம் நடத்திவிட்டு, போன தடவை ஆன கல்யாணத்தின் கதி என்ன என்று கேட்டால் சீறிடும் சிறுமதிக் கூட்டந்தான் என்ற தைரியத்தில், மரத்திற்கு கற்பகத்தரு என்று பெயரிட்டு வணங்குவோரின் கும்பல்தான் என்ற துணிவில், வேப்பமரத்திற்கும், அரசமரத்திற்கும் திருமணம் நடத்திவிட்டு, கணவனும், மனைவியும் கைகோர்த்து சுற்றிவந்து "அடிவயிற்றை"நோக்கும் "ஆத்மாக்கள்" நிரம்பிய கூட்டம்தானே என்ற உறுதியில் போட்டார்களா இந்ததிட்டத்தை! எல்லோரும் மரமண்டையர்கள் என்ற நம்பிக்கையால் தீட்டினார்களா இந்த மர நடும் மதியூகம் மிக்க காரியத்தை! மந்திரிகள் நினைத்ததை எல்லாம் பரீட்சை செய்ய நாம்தான் அகப்பட்டோமா? பசி போக்க வழி கேட்ட சிவன்இராத்திரிக்கு ஏகாதசி சொன்ன விடையைவிட விசித்திரமாக இருக்கிறது நமது மந்திரியாரின் 'மரத்திட்டம்!'

காடு கொன்று நாடாக்கிய காவலர்களைக்கண்டிருக்கிறோம்-வரலாற்றில்! இப்பொழுது நாடு காடாகட்டும் என்று கண்மூடிக்கொண்டு கூவும் 'கனம்களைப்' பார்க்கிறோம் நேரில்—கண்ணெதிரில்! பனி தூவி மழையைப் பொழிவதும், மின்சார அலைகளால் கூடிநிற்கிற மேகங்களைச் சிதறடித்து மழையை நிறுத்தவும் முடியும் என்று போட்டி போடுகிறார்கள் மேலைநாடுகளில்! இங்கு காடுகளைப் பெருக்கி வருணனின் கருணையைப் பெறப்போகிறார்களாம்!

நாமக்கல்லார், வன மகோற்சவம்பற்றி பாடிய பாட்டடிகளையே திருப்பிக் கேட்போம், சிறிது மாற்றத்துடன்! பாட்டாக அல்ல, கருத்துருவில்!

வனமிருந்திடில் மழை பொழிந்திடும் வானநீதியின் சத்தியம்! ஆனால் வனமெழுப்பி நாம், மழை பெருக்கிடும் வாய்மை காண்பது எத்தினம்! இனி வளர்ந்து நாட்டிலெங்கணும் பசி பறந்திடச் செய்யுமோ?

✻

## வருந்துகிறோம்

காஞ்சீபுர நகராண்மைக் கழக சுகாதார பணிமனைத் தலைவர் திரு என். ஏ. சுந்தரராசுலு அவர்களின் துணைவியார் திருமதி. பத்மாவதி அம்மையார் 22—6—50ல் இயற்கை எய்திய செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். அன்புக் கணவனையும், ஆசை புதல்வர்களையும், இன்ப மகளையும், தமது 38-ம் வயதில் விடுத்துச் சென்றுவிட்டார். துயரத்தால் தாக்கப்பட்டுத் துடி துடிக்கும் துணைவருக்கும் அம்மையாரின் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ✻ அபாய அறிவிப்பு ✻

[ அரங்கண்ணல் ]

"என்ன திமிரடா, அவளுக்கு! நான் தெருவில் வருகிறது தெரிகிறது—தெரிந்தும் காலை நீட்டிக் கொண்டு, காணாதது போல், உட்கார்ந்திருந்தாள்—பார்த்தாயோ, நீ? புருடன் பயில்வான் என்ற கர்வம் தலைக்கேறிக் கிடக்கிறது, தட்டுவாணிக்கு!" என்று சிறினார் சீமான்.

சிங்காரம்—அவரோடு கூடமாடச் சென்று வருபவன், சிநேகிதன் போலக் கருதப்படுபவன்—ஒன்றும் புரியாமல் விழித்தான். சீமான் விளக்கலானார்.

"கோடி வீட்டு குப்பியைப் பற்றித்தாண்டா சொல்கிறேன்—குப்பி பயில்வான் பக்கிரியின் மனைவி தானே?"

"ஆமாம்!"

"பயில்வானுக்கும் நமக்கும் ரொம்ப நாளா தகராறு வளர்றது தெரியுமில்லே உனக்கு..."

"தெரியுங்களே! நீண்ட நாளா அவன் நம்மை மதிக்கிறதில்லே—எதிரியாக்கூட நினைக்கிறான்"

"அந்தத் தைரியத்திலேதாண்டா அவ என்னை அவமரியாதை செய்யறா—இன்று சாயங்காலம் தெருப் பக்கமாப் போகிறபோது, அவளைக் கவனிச்சியோ?"

"இல்லிங்களே!"

"நீ கவனிச்சிருக்க மாட்டே! நான் கவனிச்சேன்—காலை நீட்டிப் போட்டுக்கொண்டு ஒய்யாரமா உட்கார்ந்திருந்தா, அதுமட்டுமா நினைக்கிறே—உள்ளே பார்த்து 'தங்கச்சி, விளக்குமாறு கொண்டா?' என்று கூடச் சொன்னாடா!"

"சொன்னாளா? நீங்க, ஏன் சொல்லக் கூடாது இதை, அப்பொழுதே! ஒருகை, பார்த்திருக்கலாமில்லே...."

"உன்கிட்டே சொல்றதே, ஓதிய மரத்துக்கிட்டே ஓதலாம்! உனக்குத் தான் ஸ்திரபுத்தியில்லியே — இன்னைக்கு என்கிட்டே பேசறே! வீட்டுக்குப் போகிறபோது வீதியிலே அவளைப் பார்த்தா என்ன சேதிங்கன்னு விசாரணை போடுறே! இரண்டு ஆட்டிலே ஊட்டுற குட்டிமாதிரி இருக்க நினைக்கிறே—உன்னை நம்பி நான் எந்தக் காரியத்திலே இறங்குவது? இப்பதான் கேட்கிறேன் — இந்த விஷயத்திலே நீ என்ன செய்யப் போறே?"

"இதிலே என்னங்க இருக்கு யோசனைக்கு? மட்டுமரியாதை வேணுங்களா—மனுஷன் போறாரேன்னு கொஞ்சமாவது அச்சம், அடக்கம் இருக்க வேணுமா? ஊருக்குச் சீமான் நீங்க, சிங்காரம்னாவே சிரித்த பிள்ளையும் வாய் மூடுகிறது — ஆமாங்க, இதை முத்தவிடறதுலே பிரயோஜனமில்லே! இரண்டிலே ஒண்ணு பார்த்துடவேண்டியது தான்!"

சீமானும் சிங்காரமும் வருவதை, குப்பி கவனித்தாளோ, என்னவோ, திண்ணையைப் பெருக்க விளக்குமாறு கொண்டுவருமாறு சொன்னது மட்டும் வாஸ்தவம்! சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்ட சீமானுக்குச் சீற்றம் வந்தது. காரணம்—சீமானுக்கும் பயில்வானுக்கும் நீண்டநாள் தகராறு.

"நானுண்டு—என் கையுண்டு என்று இருக்கிறபோது எதுக்கு இன்னொருத்தன் கிட்டே போய் கையைக் கட்டிக்கிட்டு நிற்கணும்? நானும் மனுஷன்—அவனும் மனுஷன்!" இதுபோன்ற போக்குள்ளவன் பயில்வான்.

"ஊருக்குச் சீமான் நான்—நல்லதும் பொல்லாததும் என் காலடியிலே கிடக்கு! இந்தக் கபோதி மட்டும் கவுரவமாய் பேசறதில்லே—கையைக் கட்டுறதில்லே! கர்வமா நடந்துக்கிறானே — என்ன திமிர்!" இது, பயில்வான் பணிந்து போகாததால் சீமானுக்கு ஏற்பட்ட சிந்தாகூலம்.

சிந்தாகூலம் விரிந்து, வேதனையாக மாறி, 'எப்படியாவது ஒருகை அவனைப் பார்த்துவிடவேண்டும்' என்ற அளவுக்குச் சீற்றம் உருவாகியிருந்தது. இந்தச் சமயத்தில், குப்பி, ஒரு காரணமாகக் கிடைத்தாள்!

தனக்குள்ள பணபலம், அது கொண்டுவரும் பக்கபலம் ஆகியவைகளைக் கொண்டு பயில்வான் மீது பாயத் திட்டமிட்டார் சீமான். சிங்காரத்திடம் சொன்னார். ஒரு நிமிஷம், தான் இந்தத் தகராறில் கலந்து கொள்ள முடியுமோ என்ற கவலை வந்தது அவனுக்கு! காரணம், இங்கே அவன் சீமானின் சிநேகிதனே யொழிய, வீட்டிற்குச் சென்றால், வேதனையைத் தினம் காணுபவன்—சோறில்லையென்று துடிக்கும் குழந்தைகள், வடிக்க அரிசி கிடையாதேயென வாடி நிற்கும் மனைவி ஆகியோரைக் கொண்டது அவன் வீடு! இந்நிலையில், சீமானோடு சேர்ந்துகொண்டு சண்டை சச்சரவுக்குப் போனால் என்ன கதியாகுமோ என்ற அச்சம்!

யோசனை முடிவதற்குள், சீமான் கடைசியாகக் கூறியது நினைவுக்கு வந்தது. 'கேவலமாய் போய்விடுமே! எத்தனை நாளா அவரோட சரிக்குச் சமமாப் பழகினோம். இப்பொழுது வீட்டு வேதனையைச் சொன்னா கெக்கலிப்பாரே! பெரிய மனுஷன் போல சில்க் ஷர்ட்டும், கிளாஸ்கோ மல்லும் கட்டித் திரிந்தியே இத்தனையும் வேஷம்தானா? என்று கேட்டுவிட்டால் மானம் போய்விடுமே — மதிக்கவே மாட்டாரே! என்பது, எண்ணத்திற்கு வந்தது. போலிக் கவுரவம்! வீண் ஜம்பம்!! இவைகளின் மொத்த வியாபாரியாக இருந்துவருபவன் அவன். என்ன செய்வது—எதிர்ப் பேச்சு பேசினால் ஏளனம் பரிசாகக் கிடைக்கும்! சீமானோடு, தானும் தோள்தட்டுவதாகச் சொன்னான்.

X X X

ஜூன் 29ந் தேதியன்று, கொரியப் போர் குறித்து இந்தியா செய்திருக்

கும் முடிவைக் காணும்போது, சிங்காரத்தின் கதை நம் கவனத்துக்கு வருகிறது.

கொரியாவில் நடைபெற்று வரும் போரையொட்டி ஜூன் 28ல் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சில் போர்க்கோலம் பூண்டது. உறுப்பினராக இருக்கும் நாடுகள் தென் கொரியாவுக்கு ராணுவ உதவியளிக்க வேண்டுமெனத் தீர்மானித்தன. தீர்மானம் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டதாகும். தனது சார்பிலுள்ள தென் கொரியாவுக்காகப் பரிந்து, அமெரிக்கா, அவசரத்தோடு, கொண்டுவந்த தீர்மானமாகும்.

அதைபேற்று, அதன்படி நடக்கத் தாங்கள் தயார் என்பதாக ஒருநாள் தீவிர யோசனைக்குப் பின் இந்தியா பிரகடனம் செய்திருக்கிறது.

இந்தப் பிரகடனத்தைக் காணும் பொழுது, நாட்டு நலனில் அக்கரை கொண்டோருக்கு ஆச்சரியம் எழும்பாது; அச்சமும் வேதனையுமே உருவாகும்.

உலக சமாதானம் காக்கப்பட வேண்டும் என்ற பெரிய இலட்சியத்தின் அடிப்படையிலேயே இம்முடிவு செய்யப்பட்டதாம் — விளக்கியிருக்கின்றனர், இந்திய சர்க்கார்.

வீடு தீப்பற்றி எரியும்போது, விளக்கிலிருக்கும் எண்ணெயில் இன்னும் சிறிது நான் தருகிறேன் அதில் ஊற்ற, என்று கூறுவது போன்ற முடிவைச் செய்துவிட்டு, ஊர் நன்மைக்காக இதைச் செய்கிறேன் என்று விளக்கம், விமரிசனம் வெளியிட்டிருக்கிறது இந்திய அரசாங்கம்.

"வெளிநாட்டுக் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை—இந்நடவடிக்கை வடகொரியாவின் ஆக்கிரமிப்புப் போக்கைத் தடுக்கவும், ஐக்கிய நாடுகள் சபையின் கவுரவத்தைக் காக்கவும் தான்,'-என்பது, இந்தியா, தனது முடிவுக்குத் தரும விளக்கம்.

வெளிநாடுகள் குறித்து தாங்கள் கையாண்டு வரும் கொள்கையில் மாற்றமில்லையாம் — கூறுகின்றனர், எப்போதும் போல நடு நிலைமைக் கொள்கையே வகிப்போம் என்பதை, விளக்குவதுபோல!

முடிவையும் — விளக்கத்தையும் கண்டால் சிரிப்புக் கலந்த சிந்தாகூலமே உருவாகும், இத்தகைய இக்கட்டில் நாடு மாட்டிக்கொள்கிறதே என்பதால்.

## உலகப் போர்!

கொரியப் போர்—மூன்றாவது உலகப் போராக மாறிவிடலாம் என்ற பயமும் அதற்கான அறிகுறியும் வளர்ந்து வருகிறது.

ஜூன் 25-ந்தேதி போர் தொடங்கியதாக அறிவிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை வளர்ந்துவரும் சூழ்நிலையைச் சிறிது கூர்ந்து கவனித்தால், போரின் போக்கு எவ்வளவு மும்முரமாகி வருகிறது என்பது விளங்கும்.

அமெரிக்கா கொரியர் போரில் நேராகஇறங்கிவிட்டது. நடவடிக்கை எடுக்குமாறு தனது கடற்படைக்கும் உத்தரவு பிறப்பித்துவிட்டது சினசியாங்–கேய்–ஷேக் மறைந்திருக்கும் பார்மோசாத் தீவைப் பலப்படுத்துமாறும், பக்கமிருக்கும் இடங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கட்டளையிட்டிருக்கிறது. ஜப்பானின் நிர்வாக தளகர்த்தராக இருந்த மக் –ஆர்தரை போர்த் தளபதியாகப் பொறுப்பேற்கச்செய்திருக்கிறது. கம்யூனிஸ்டுகள் நிறைந்து கொந்தளிக்கும் பிலிப்பைன்ஸ் தீவுக்கும், இந்தோசீனாவுக்கும் அதிகமான ஆயுத, நிதி, உதவிகளை அனுப்பத் திட்டம் தீட்டிவிட்டது.

அமெரிக்காவின் போர் விமானங்களும் கப்பல்களும் வடகொரியாவைத் தாக்க ஆரம்பித்துவிட்டன! குண்டுகள் வீசப்படுகின்றன—இயந்திரத் துப்பாக்கிகள் அலறுகின்றன! மக்–ஆர்தர், தென்கொரியாவுக்குப் பறந்துசென்று திரும்பி இருக்கிறார்!

பாதுகாப்புக் கவுன்சில் உறுப்பினர்களாயிருக்கும் நாடுகள் தென்கொரியாவுக்கு, இராணுவ உதவி செய்யவேண்டும் என்று தீர்மானிப்பதற்கு முன்னரே இத்தனை ஏற்பாடுகளும், அமெரிக்காவால் செய்யப்பட்டிருக்கின்றன.

ஐக்கிய நாடு சபை இராணுவப் பாதுகாப்புத் தரலாம் என்று தீர்மானிக்குமுன்னரே அமெரிக்கா தென்கொரியாவுக்கான இராணுவ உதவிகளை அளித்துவிட்டது.

இது தெரிந்தும், இந்தியா கூறுகிறது 'ஐக்கிய நாடுகள் சபையின் கௌரவத்தையும் உலக சமாதானத்தையும் காப்பாற்றவே, தென்கொரியாவுக்கு உதவி செய்யப்போவதாக!

கொரியாப் பிரச்னை —கோர உருவெடுத்து வருகிறது. உலகத்தை இன்னொரு மாபெரும் புயலில் சிக்க வைத்துவிடுமோ என்ற கவலையும் ஏக்கமும் பரவ ஆரம்பித்துவிட்டன. சரித்திர ஆராய்ச்சியாளர் பெட்ரண்ட் ரஸ்ஸல் "இது மூன்றாவது உலகப்போரின் அறிகுறி. பத்து ஆண்டுகள் இந்தப்போர் நடைபெறும்" என்று கணித்துக் கூறுகிறார்!

கம்யூனிசமும்— முதலாளித்துவமும் மோதிக்கொள்வதற்கான அடிப்பீடம் அமைக்கப்பட்டு விட்டது என்று அபிப்பிராயப்படுகின்றனர்— அறிஞர்கள். 'போலீஸ் நடவடிக்கை' என்கிறார் ட்ரூமன்! 'பொல்லாத நடவடிக்கை' என்று சொல்கிறார் மாசேதுங்—செஞ்சீனத் தலைவர்!

உலகம் முழுவதிலுமுள்ள வலதுசாரிப்பத்திரிகைகளும், செய்திப் பீரங்கிகளும் ரஷ்யாமீது பாய்கின்றன. ரஷ்யாவின் தூண்டுதல்மீதே வடகொரியா, தென்கொரியாமீது ஆக்கிரமிப்பைத் துவக்கியதாக அறிவிக்கின்றனர்.

ஆனால், வளர்ந்துவந்த சூழ்நிலையை வைத்துக் கவனித்தால் விளங்கும் விஷயங்கள் வேதனையூட்டுபவையாக இருக்கின்றன!

## தகராறு வளர்ந்த கதை

கோரியா — 1945 வரை ஜப்பான் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டுக்கிடந்த சிறுநாடாகும் — சற்றேறக்குறைய சென்னை மாகாணத்திலுள்ள இரு, சிறுமாவட்டங்கள் அடங்கியது போன்றதாகும்.

1910ல் ஜப்பானியப் படையெடுப்புக்குஆட்பட்ட கொரியாத்தீபகற்பம் —கடந்த இரண்டாவது உலகப் போரில் ஜப்பான் சரணாகதி அடையும்வரை 35 ஆண்டுகள், ஜப்பானிய ஆதிக்கத்திலேயே கிடந்தது!

ஜப்பானிய சரணாகதிக்குப் பின் அமெரிக்காவும் — ரஷ்யாவும் கொரியாவை இரண்டு பாகமாக்கி தங்கள் பாதுகாப்பில் வைத்துக்கொண்டன. வடகொரியா ரஷ்யாவின் மேற்பார்வையிலும், தென்கொரியா அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலும் வந்தன.

பின் யால்டா, பாட்ஸ்டாம் ஆகிய இடங்களிலேநேசநாடுகளுக்கிடையே

போரில் பிடிப்பட்ட நாடுகள்பற்றி முடிவுகள் செய்யப்பட்டன. அதன் படி கொரியாவுக்கு, சுதந்திரம் வழங்கி ஒரே நாடாக்கிவிடுவதென்று முடிவு செய்யப்பட்டது.

வடகொரியா — தொழில் வளம் நிரம்பியது, தென்கொரியா விவசாயம் கொழிப்பது.

1946ல் முழுகொரியாவுக்கும்ஒரு அரசியலமைப்புத் தயார் செய்யப்பட்டது, கொரியத் தலைவர்களால். அதன்படி செயோலைத் தலைநகராகக் கொண்டு 15 பேர் கொண்ட ஆட்சிக்குழு ஏற்படுத்துவதென்றும் ஆட்சிக்குழுவுக்கு ஆதரவாக ஒரு பார்லிமெணடு அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டிருந்தது. அதோடு, தங்கள் நாட்டில் முகாம் போட்டிருக்கும் வெளிநாட்டுப் படைகளான ரஷ்ய இராணுவமும், அமெரிக்கப் படையும் வெளியேறிவிட வேண்டும் என்றும் கொரியாத் தலைவர்கள் கோரினர்.

இந்நிலையில், 1946 ஜனவரியில் — நேசநாடுகளின் சார்பில் கீழ்ப்பிராந்திய நிர்வாகஸ்தராக இருந்த மக்—ஆர்தர், 'கொரியாவுக்குத் தற்போது சுயாட்சி வழங்குவது நல்லதல்ல' வென்று வெளியிட்டார். நீண்ட ஆண்டுகள் அந்நிய ஆதிபத்யத்துக்குக் கீழே கொரியா இருந்து வந்ததால், உடனடியாக சுதந்திரம்அளிப்பது கூடாதென்றும் தற்காலீக சர்க்கார் நியமிப்பது நல்லதல்லவென்றும் கூறினர்!

இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதற்கு இடைஞ்சலாக எத்தகைய காரணத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நீண்டநாட்கள் கூறிவந்ததோ, அதே தோரணையில் கூறினர்.

ஆனல், ரஷ்யாவோ, கொரியாவில் தற்காலீக அரசாங்கம் நிறுவப்படவேண்டுமென்பதில் அதிக சிரத்தை காட்டியது.

இதன் விளைவாக 1947ல் கொரியப் பிரச்னை ஐக்கியநாடுகள் சபைக்குக் கொண்டுவந்து விவாதிக்கப்பட்டது. முடிவில் கொரியா நிலைமையைக் கண்டுவர சீனவில் இந்தியத் தூதவராக இருந்த கே. பி. எஸ். மேனன் தலைமையில் ஒரு கமிஷன் அனுப்பப்பட்டது. அவர், கொரியா குறித்துத் தனது கருத்தைத் தெரிவிக்கையில்,

"400 உதிரிக்கட்சிகள் இருந்தாலும் ஜனநாயக ரீதியில் அரசாங்கம் நிறுவ கொரியா இலாயக்குள்ளதுதான். இங்குள்ள மக்கள் சுதந்திரதாகம் கொண்டவர்களாகவே இருக்கின்றனர்."

என்று வெளியிட்டிருந்தார். எனினும் அமெரிக்க ஆதிபத்தியம் கொரியாவில் ஒரு தற்காலீக சர்க்காரை நியமிக்க முன்வரவில்லை.

இதன் காரணமாக அதிருப்தியடைந்த வடகொரிய மக்கள் 1948 பிப்ரவரி 16-ல் ஜனநாயகக் குடியரசு ஒன்றை ஸ்தாபித்தனர்.

அதேமாதத்தில் தனது பரிகமான தென்கொரியாவில் அமெரிக்கா தேர்தல் நடத்தியது—தேர்தல் ஒரே ரணகளமாயிருந்தது! கடைசியில் அதே ஆண்டு ஆகஸ்டு 15-ல் தென்கொரியாவிலும் ஒரு சர்க்கார் நிறுவப்பட்டது.

வட கொரியா சர்க்காரை ரஷ்யா, ருமேனியா, செக்கோஸ்லோவேக்யா, யுகோஸ்லோவேக்யா—முதலிய நாடுகள் அங்கீகரித்தனவேயொழிய முதலாளித்துவ நாடுகள் அங்கீகரிக்கவில்லை!

தென்கொரியா பிறப்பட்ட நாடு என்றும் அதற்கு உதவப்படவேண்டு

(10-ம் பக்கம் பார்க்க)

## காகிதமும் கருத்தும்

● (15-ம் பக்கத்தொடர்ச்சி)

தென்னிந்தியாவில் போதுமான காகித ஆலைகள் இல்லை—வடநாடே இவ்விஷயத்திலும் வளமாக இருக்கிறது.

சர்க்காரின் உத்தரவால் இலாபம் வடநாட்டுக்குத்தான்; தென்னிந்தியா வழக்கம்போலத் திண்டாட வேண்டித்தான் நேரும்!

இந்தியா ஓரேநாடு— என்றகருத்தில் வடநாட்டில் உற்பத்தி உயர்ந்தால் என்ன, தென்னட்டில் உயராவிட்டால் என்ன — எல்லாம் ஒன்று தானே என்றபோக்கில் சர்க்கார் நடந்துகொள்கிறது.

ஆனல், அதனல் விளையும் பாதகங்களும், திண்டாட்டங்களும் உற்பத்தி குறைந்த தென்னட்டைமிகவும் பாதிக்கிறது.

தென்னடு பாதிக்கப்படுவது வட இந்திய தலைவர்களுக்கு விளங்குவதில்லை—விளங்கினலும் வெளியில் காட்டுவதில்லை!

இங்கிருப்பவர்களோ இந்த இக்கட்டான நிலையை வடநாட்டுச் சர்க்காருக்கு விளக்குவதுமில்லை—விளக்கிச்சொல்லும் நம்போன்றோர் மீது கணைகளை வீசுவதே கடமை என்று கருதுகின்றனர்.

"இந்தியா ஒரேநாடு" என்றுகூறப்பட்டாலும் எங்கும் ஒரே சுமுகமான நிலை இல்லை—இருப்பதற்கான வகையும் இல்லை! வாழ்வோன்-வாழமுடியாதவனைச் சுரண்டும் காட்சிகள்தான் தொடர்ந்து நடைபெறுகின்றது!

காகிதக் கட்டுப்பாடு காரணமாக விளைந்த தொல்லைகள் அனந்தம். அது ரத்து செய்யப்படுவதால், மகிழ்ச்சி மலரத்தான் செய்யும் வியாபாரிகளுக்கும், சம்பந்தப்பட்டவர்களுக்கும்.

ஆனல், தென்னட்டில் போதிய காகித உற்பத்தி இல்லையென்றால் தென்னட்டுக்குத் தேவையான காகிதப் பொருள் எங்கிருந்து கிடைக்குமோ அங்கிருந்து வரவழைக்கப்பட வேண்டும்.

இந்திய சர்க்காரோ உள் நாட்டில் உற்பத்தியாகும்பொருளே விற்பனையாகவேண்டும் என்ற எண்ணத்தால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருளுக்கு வரிபோட்டு விலையை அதிகமாக்கி விடுகின்றனர்.

இதனல், இங்கு உற்பத்தியாகும் பொருளுக்கே கிராக்கி ஏற்படுகிறது. இந்தியாவில் உற்பத்தி பெருகிய பிரதேசமாக இருப்பது—வட இந்தியாதான். எனவே, உற்பத்தியில் குறைந்த தென்னடு வங்கத்தையும் பிகாரையும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

வட இந்தியாவோ, தனது தேவைகளைக் கவனித்த பின்னரே தென்னிந்தியாவின் கோரிக்கையைக் கவனிக்கிறது.

இதன் விளைவாக தென்னட்டிலுள்ளோர் திண்டாடவேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந்த இழிநிலை என்று ஒழிவது—இதைக்கேட்டால் நம்மீது சீறுகின்றனர், இங்கேயே பிறந்தோர்—நம்முடனேயே வாழ்வோர்!

அவர்களின் சிந்தனைக்கு இக் காகித விவகாரத்தையும் சமர்ப்பிக்கிறோம்.

திராவிட நாடு

ஞாயிறு] 9—7—50 [காஞ்சி

# புதுப் போதனை

✲

"இந்தி பெரும்பாலான மக்களின் மொழி. ஆகவே அது தேசிய பாஷையாகும்; நீங்கள் கற்றுத்தானாகவேண்டும்"

இந்தி ஏன்? என்று கேட்போருக்கு, வடநாட்டினர் தரும் பதில் இது. "பெரும்பாலான மக்கள் பேசுகிறோம், எனவே இந்தியாவுக்குள்ள பொது மொழி அதுதான், ஆகவே நீங்கள் அவசியம் கற்றுத்தானாக வேண்டும்" என்று, இந்தி, இந்திய நாடெங்கும் பரப்பப்படவேண்டும் என்ற ஆசையோடு வெறியும் கலக்க, வேகமாகப் பேசுகின்றனர்.

வடநாட்டினர் வார்த்தையே பொக்கிஷம்—அவர்களிட்டதே கட்டளையென எண்ணிக் கிடக்கும் இங்குள்ள காங்கிரஸ் 'கனம்'களும், தேசியத் திருவாளர்களும்,

"இந்தி சர்க்கார் பாஷையாகப் போகிறது. ஆகவே எதிர்காலத்தில் சர்க்கார் உத்தியோகங்களைப் பெற இந்தி பாஷை அவசியம். தவறிவிடக்கூடாது, நாம். ஆகவே, எல்லோரும் இந்தி கற்றுக்கொள்ளவேண்டும்"

என்று வற்புறுத்துகின்றனர்—தினசரி! செல்லுமிடமெங்கும், தாங்கள் ஏன் பள்ளிச் சிறுவர்கள் பயிலவேண்டும் என்று கட்டாயப் படுத்துகிறார்கள், என்பதற்குக் காரணமாகக் கூறுகின்றனர்.

இந்த, இரு காரணங்களையும் காணும் நமக்கோ—இதய வேதனை அதிகமாகிறது.

வட நாட்டினர் வேண்டுமென்றே இந்தியைப் பரப்பத் திட்டமிடுகின்றனர்.

அதை அறியாத இங்குள்ளோர் உத்தியோகமில்லாது போய்விடும் என்று பயமுறுத்துகின்றனர்—விஷயத்தை விளங்கிக் கொள்ளாமல், என்பதாக, நாம் கூறி வருகிறோம்!

வடநாட்டினர் ஆதிபத்யவெறியையும், அது அறியாது இங்குள்ளோர் இந்தியைப் பரப்பப் பாடுபடுவதையும் எடுத்துக்கூறும், காமராஜர்களும், பக்தவத்சலங்களும் கண்டிக்கத் தவறுவதில்லை!

இப்போது, நாம் காட்டும் காரணங்கள் குறித்து ஒருவர் பேசுகிறார்.

"தென்னிந்தியாவில் இந்தி மீது துவேஷம் அதிகமாயிருக்கிறது. பெரும்பாலான மக்களின் மொழி, ஆகவே அது தேசிய பாஷையாகும், நீங்கள் கற்றுத்தானாகவேண்டும் என்று வட இந்தியாவில் இந்தியை ஆதரிப்போர் முரட்டுத்தனமாக வற்புறுத்துகின்றனர். எனவே தான் தென்னிந்தியாவில் எதிர்ப்பு மேலும் மேலும் அதிகமாகிறது"

"இந்தி சர்க்கார் பாஷையாகப் போகிறதென்பதையும், அப்பாஷையைக் கற்றுக்கொள்ளாதவர்கள் சர்க்கார் பதவிகளைப் பெற முடியாதென்பதையும் நாம் அதிகம் வற்புறுத்தி வருகிறோம் — இது கூடாது"

முரட்டுத்தனமாக வடநாட்டினர் பிடிவாதம் செய்கின்றனர், நாம் அதிகமாக வற்புறுத்துகிறோம் — இது கூடாது, என்பதாகப் போதனை புரிந்திருப்பவர் சாதாரணமானவரல்ல; இம்மாகாணத்தின் கவர்னர்!

அண்மையில் நீலகிரி ஜில்லா இந்திப் பிரசார சபையில் பேசும்போது கவர்னர் பவநகர் இத்தகைய மொழிகளைச் சிந்தியிருக்கிறார். துவேஷம் பரவுகிறது. அது வளராமல் தடுக்கப்படவேண்டுமானால் இந்தியைப் பரப்ப இப்போது கூறப்படும் காரணங்களை இனியும் கூறக்கூடாது — அதுமேலும் ஆத்திரத்தையே எழுப்பும், ஆகவே 'புது முறை'யில் புகவேண்டும் என்று போதனை புரியும் நிலையில் இத்தகைய வார்த்தைகளைச் சிந்தியிருக்கிறார்.

"தேச ஒற்றுமைக்காக நாம் இந்தி கற்கவேண்டும். இந்தியாவின் தேசிய ஐக்கியம் பலப்படவேண்டுமானால் நாம் இந்தியைப் படிக்கவேண்டும். இஷ்ட பூர்வமாகவே இந்தி கற்கவேண்டும். வட இந்தியரைப் புரிந்துகொள்ளவும், அவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளவும் இந்தி கற்பது அவசியமாகும்"

என்று சமரச போதனையைப் புரிந்திருக்கிறார். தேச ஒற்றுமைக்காகவும், வட இந்தியரைப் புரிந்துகொண்டு அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் இந்தி அவசியம்— என்று, இப்போது இம் மாகாணக் கவர்னர் அன்போடு கூறுகிறார், நமக்கு.

பெரும்பாலான மக்களின் பாஷை அது—ஆகவே நீங்களும் கற்கவேண்டும்.

சர்க்கார் பாஷையாகப் போகிறது—ஆகவே உத்தியோகங்கள் கிடைக்காமற் போய்விடும். ஆதலால், எல்லோரும் கற்கவேண்டும்.

இந்த, இரு காரணங்களும் இதுவரை வடநாட்டவராலும் நம்மவராலும் கூறப்பட்டன.

இவைகளைக் கேட்ட நாம், 'வேடிக்கையாக இருக்கிறதே — எல்லோரும் பேசுகிறார்கள் என்பதற்காக இப்போதே இங்குள்ள சின்னஞ் சிறு கிளிகளை, சிங்காரச் சிறுவர்களை என் வேதனைக்குள்ளாக்க வேண்டும், கற்கும்படி கட்டாயப் படுத்தவேண்டும்' என்று கேட்டோம் —கேலியைப் பதிலாகத் தந்தனர் தேசியத் திருவாளர்கள்!

இப்போது பவநகர் பேசுகிறார்— இதுவரை 'இந்திவாலாக்கள்' கூறி வரும் காரணங்கள் சரியல்லவென்றும், அது முரட்டுப்போக்கென்றும் —தவறானதென்றும் கூறுகிறார் பவநகர்—இம்மாகாணக் கவர்னர்!

"வட இந்தியருடன் தொடர்பு வைத்துக்கொள்ள அவசியம் இந்தி கற்கவேண்டும்"

என்று, புதுப்போதனை புரிகிறார்.

புதுப் போதனையால் — இந்தி குறித்து இவர்களது போக்கு எவ்வளவு தூரம் சரிகிறது என்பது விளங்கும்!

முரட்டுத்தனம்

தவறான போக்கு

என்று, இதுவரை கூறப்பட்டு வந்தது குறித்து, கூறுகிறார்—இந்தி

மீது கொண்ட வெறுப்பால் அல்ல; அது பரப்பப்படவேண்டும் என்ற ஆசையால், புதுப் போதனை புரிந்த வண்ணம்!

'வட இந்தியருடன் பழக இந்தி கற்பது அவசியம்!'

கூறுகிறார், கவர்னர்! சரி, பழக இந்தி அவசியம்தான்—ஆனால் பழகப்போவது யார் — சிறு குழந்தைகளா? பொதுமக்களா? நாட்டவர் எல்லோருமா?

இங்கிருந்து, வடநாடு சென்றால் இந்தி புரிந்துகொண்டிருப்பது நல்லதுதான் — அதற்கு இளம் மாணவர்கள்மீது இந்தியை ஏன் கட்டாயமாக்கவேண்டும்? வடநாடு செல்லவும், அங்குள்ளோரிடை பழகவும் அவசியமுள்ளவர்கள் சிறுவர்களல்லவே—மாணவர்களுமல்லவே!

பழகவும், புரிந்துகொள்ளவும் வேண்டுமென்று விரும்புபவர்கள் — இந்தியைப் படித்துத்தானாகவேண்டும் என்ற அவசியமுமில்லையே!

எனினும் பவநகர், ஆசை குறையாததால் இப்போதனையைப் புரிந்துள்ளார். இதோடு, அவர் கூறியிருக்கும் கருத்து, அவருக்குக் கீழிருக்கும் மந்திரிசபையினர் அவசியம் உணரவேண்டியதாகும்.

"இந்தி, இஷ்டபூர்வமாகவே கற்கப்பட வேண்டும்"

இந்தி, இஷ்டமாகயிருக்க வேண்டும் என்று சொல்கிறார்—கட்டாயப் படுத்தக்கூடாது என்று நேரிடையாகச் சொல்லாமல்!

பெரும்பான்மையோர் பேசுவதால் இங்குள்ளோரும் இந்தி கற்க வேண்டும் என்று சொல்லக்கூடாது.

உத்தியோகம் பெற இந்தி அவசியம், ஆகவே இந்தி கற்கப்படவேண்டும் என்று வலியுறுத்தக் கூடாது. வடநாட்டினரின் முரட்டுப் போக்கும், இங்குள்ளோரின் கூற்றும் சரியல்ல.

இஷ்ட பூர்வமாகவே இந்தி கற்கப்படவேண்டும்.

—இத்தகைய வார்த்தைகளால் 'இந்தி' குறித்து, அவர் போதனை புரிந்திருக்கிறார். போதனையில் 'வட இந்தியாவுடன் பழக இந்தி கற்பது அவசியம் என்ற சமரசவார்த்தைகள் இருக்கிறதென்றாலும், பவநகர் கூற்று, இந்தி வெறி — இப்போது எவ்வளவு சரிந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும்.

வயது வந்தோர், விரும்பினால் இந்திகற்றுக்கொள்வது குறித்து—நமக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை.

ஆனால், வேண்டுமென்றே, 'தேசியம்' என்ற போர்வையில் இங்குள்ள மாணவர்கள்மீது திணிக்கப்படுவதை நாம் சகிக்க முடியாது—பொறுக்கவும் இயலாது.

இதைப் புரிந்த நிலையில், கவர்னர் பேசியிருக்கிறார். கவர்னர்—இம்மாகாணத்தின் தலைவர். அவரே கூறுகிறார் — விளக்குகிறார்— இந்தி வெறி வடநாட்டுக்கிருக்கிறது, இந்தி குறித்து இங்குள்ள அமைச்சர்கள் கூறுவது சரியல்ல, கட்டாயமின்றி இஷ்டபூர்வமாகவே அது கற்கப்பட வேண்டும் என்பதாக.

நாட்டின் கவர்னர்! அவர் கூற்றுகள் இவை—இதை ஏற்குமா சர்க்கார் அல்லது எப்போதும்போல வீண் விளையாட்டிலேயே ஈடுபடப் போகிறதா?

✲

## அபாய அறிவிப்பு

11-ம் பக்கத் தொடர்ச்சி

வெள்ளி, இரும்பு, தகரம் முதலாய உலோகப் பொருள்களின் விலையும் மிளகு, தோல், எண்ணெய், மணிலா போன்றவைகளின் விலையும் உயர்ந்து விட்டன. பீதியும், குழப்பமும் எங்கும் பரவத் துவங்கிவிட்டன.

ஆஸ்திரேலியா:— மலேயாவுக்குப் பெரிய பெரிய விமானங்களை அனுப்ப முடிவு செய்துவிட்டது.

நியூஜிலாந்தும்:—உதவி தர முன் வந்துவிட்டது.

மக்ஆர்தர் வசம் அபரிமிதமான பொறுப்புகள் தரப்பட்டுவிட்டன. ஆஸ்திரேலிய கப்பற் படையும் ஒப்புவிக்கப்பட்டுவிட்டது.

தினசரி இத்தகைய செய்திகள்! ஆசியாவில், போர்ப் புயல் மூள, அமெரிக்க ஆதிபத்தியம் திட்டமிடுவதை தீட்டிக் காட்டுகின்றன!

ஆசிய நாடுகளோ—கடந்தபோரால் வளைந்து நொறுங்கிய பொருளாதாரத்தின் கேட்டை இன்னும் நிமிர்க்கவில்லை. புதிதாகப் பெற்ற சுதந்திர வாழ்வால், தொல்லைகள் அலையென அடிக்க தத்தளித்து நிற்கின்றன!

இத்தகைய வேதனை வேளையில், இந்தியா தென் கொரியப் போரில் தன்னை ஆட்படுத்திக்கொண்டு விட்டது—அமெரிக்க மோகினியின் தாளடி பணிந்துவிட்டது!

இது, நாம் எதிர்பார்த்ததுதான்; எனினும் எச்சரித்து வந்தோம்! அப்போதெல்லாம் 'நாங்கள் நடுநிலைமை வகிப்போம்' என்று கூறி வந்தனர். இப்போதோ, ஐ. நா-சபையைக் காப்பாற்றுவது தாங்கள் தான் என்று எண்ணிக்கொண்டு 'வீண் பெருமை' என்ற ஓட்டைப் படகில் ஏறிய வண்ணம் 30 கோடி மக்களை போர்ப் புயலுக்கு இழுத்துச் சென்றுவிட்டனர்.

மத்யஸ்தராகலாம்...

பொன்னான நேரம்—ஆசியாவின் ஜோதியென்பதை நிலை நாட்டிக் கொள்ளவேண்டிய சந்தர்ப்பம். எனினும் இழந்துவிட்டனர், அமெரிக்க மோகத்தால்!

எகிப்தைப்போல — பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை ஏற்று இராணுவ உதவி நல்குவதற்குப் பதில் ஒதுங்கி நின்று ஒற்றுமை ஏற்படுத்த முயன்றிருக்கலாம்!

மத்யஸ்தராகவோ, நடுநிலைமையாளராகவோயிருந்து நாட்டின் கௌரவத்தையும் அதிகரிப்பதோடு, அடுத்த உலகப்போர் வராமலும் தடுக்க முயன்றிருக்கலாம்!

பயனுள்ள காரியமாயிருந்திருக்கும்; பட்டினியால் ஏங்கும் பலகோடி மக்கள் 'இன்னொரு யுத்தமா?' என்று ஏக்கத்துடன் கதறாமலும் காப்பாற்றியிருக்கலாம்!

ஆனால், செய்யவில்லை; தவறிவிட்டது, நேரு சர்க்கார்!!

தவறான பாதையில், 'வீண்ஜம்பத்துக்கு' ஆட்பட்டு ஓடுகிறது.

எனினும் நேரம் தவறிவிடவில்லை; இப்போதும் சந்தர்ப்பமிருக்கிறது.

இராணுவ உதவி அனுப்புமுன், கொரியப்போரை "கொடுமைப் போராக" மாறாமல் தடுக்கமுடியும்—முயன்றால், தீவிரமாக காரியங்களைச் செய்தால்!

✲

## அபாய அறிவிப்பு

7-ம் பக்கத் தொடர்ச்சி

மென்றும் கூறி ஏராளமான பண உதவியைச்செய்து வந்தது அமெரிக்கா.

கொரியாத் தலைவர்கள் தங்கள் நாட்டை விட்டு வெளிநாட்டு ராணுவம் வெளியேற வேண்டுமென்று கோரினர் — அக்கோரிக்கைக்குச் செவிசாய்த்துத் தனது படைகளை 1948 இறுதிக்குள் ரஷ்யா வாபஸ் பெற்றது.

ஆனால், அமெரிக்கா தனது படைகளை வெளியேற்ற 1949 ஜூன் 29-ந் தேதி வரை ஆயிற்று. அப்போதும் முழு ராணுவ அதிகாரிகளும் வெளியேறிவிடவில்லை. "தென்கொரியா வலுவில்லாத நாடு. ஆகவே அங்குள்ளோர் தங்கள் நாட்டைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் வகையில் ராணுவப்படைகள் பயிற்றுவிக்கப்படவேண்டும். அதற்கு போதிய அதிகாரிகள் தேவை. ஆகவே......" என்று காரணங் கூறியவண்ணம் 500 அமெரிக்க ராணுவ அதிகாரிகளை அங்கேயே விட்டுவந்தது ஆலோசகர்கள் என்ற பட்டம் கொடுத்து!

தென்கொரியாவைத் தன் கைப்பாவையாக வைத்துக்கொண்டு அமெரிக்கா, தான் உதவிசெய்வதுபோல் நடித்த வண்ணம் வடகொரியாமீது துவேஷப்புயலை சிருஷ்டித்துக் கொண்டே வந்தது. 'அகில—கொரியா' அமைக்கப்படவேண்டும் என்று ஆசைகாட்டி, தென்கொரியச் சர்க்காரை அதற்கானவகையில் ஆயுதத்தளவாடங்கள் அளித்தும், போர்ப் பயிற்சி தந்தும் பழக்கி வந்தது.

### பலப்பரீட்சை!

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் — உலக சமாதானம் நீடிக்கவேண்டும் என்ற ஆசையோடு உலக வல்லரசுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் சீனு ஆகிய நாடுகளின் பெருமுயற்சியின் பேரில் ஐக்கியநாடுகள் சபை நிறுவப்பட்டது. சாந்தியும் சமாதானமும் தழைக்கவேண்டுமென்ற நன்னோக்கத்துடன் இச்சபை துவக்கப்பட்டது! ஆனால், முதலாளித்துவம் —பொதுவுடைமை ஆகிய கொள்கைகளுக்கிடையே கடந்த போருக்குப் பிறகு 'பலப் பரீட்சை' ஆரம்பமாகியது!

உலகம் இரண்டு கூடாரங்களாகின—ரஷ்ய ஆதிக்கம் வளரும் நாடுகள், அமெரிக்க ஆதிபத்தியம் ஆதிகரிக்கும் நாடுகள் என்று இருபெரும் பிளவுகள் உண்டாயின.

பொதுவுடைமைக் கொள்கையும் முதலாளித்துவக் கொள்கையும் மோதிக் கொண்டன. நேராகநின்று அல்ல; மறைமுகமாக! இதை 'Cold-war' என்று அழைத்தனர்.

கடந்த உலகப் பெரும்போருக்குப் பின் இந்த இரண்டு கூடாரங்களிலும் நிகழ்ந்த 'பலப் பரீட்சை' நிகழ்ச்சிகள்— பல, முதலாளித்துவ முகாமிற்கு அதிர்ச்சியையும் பொதுவுடைமைக் கூடாரத்திற்கு மகிழ்ச்சியையும் தந்தன!

| மேற்கு வல்லரசு | ரஷ்யா |
|---|---|
| 1. அணுசக்தி மிரட்டல் பலிக்க வில்லை. | 1. அணுசக்தி ரகசியம் அறிந்ததோடு, அதைப் பன்மடங்கு அதிகரித்தது. |
| 2. சீனுவில் தோல்வி. ஆசியாவிலிருந்த ஆதிக்கமும், கவுரவமும் குறைந்தது. | 2. புது கம்யூனிச நாடு — சீனு—உதயமாயிற்று. இந்தோ சீனுவிலும் பலம். ஆசியாவெங்கும் கம்யூனிச வளர்ச்சி. |
| 3. பொருளாதாரம் சீர்குலைந்தது—மார்ஷல் உதவி தேவையாயிற்று. | 3. முதலாளித்துவ பொருளாதார முறை தோல்வியுறும் என்ற சித்தாந்தம் வெற்றி பெற்றது. |
| 4. தொழிலாளர்கள் மனக்குறை — வேலைநிறுத்தத் தொல்லைகள். | 4. முதலாளித்துவ முறைக்கு எதிர்ப்பு-கம்யூனிசக் கோட்பாட்டுக்கு வெற்றி. |

இதுபோன்ற தோல்விகளைக் கண்ட அமெரிக்க முதலாளித்துவம் தனது சீற்றத்தைத் தணித்துக் கொள்ள வழிவகைகளைக் காண ஆரம்பித்தது.

மோகனவலைகொண்டு, ஆசைப் பேச்சுடன் ஆசிய நாடுகளை இழுத்தது.

கடந்த உலகப் போர்ப்புயலால் சிக்கிச் சீரழிந்த இந்தியா, பர்மா, இந்தோனேஷியா போன்ற நாடுகளும் அதன் மோகன வலையில் சிக்கின.

இந்தச் சூழ்நிலை ஏற்பட்டது முதல் ஐக்கிய நாடுகள் சபை ஒரு 'விவாத மடம்' ஆகிவிட்டது!

### கொரியப் போர் ஏன்?

செஞ்சீன — பொதுவுடைமை மணத்துடன் பூக்கவே, ஏற்கெனவே பொருமிக்கொண்டிருந்த அமெரிக்காவின் ஆத்திரம் அதிகமாயிற்று.

தான் பணம் தந்து, படை தந்து உதவிய சியாங்-கேய்-ஷேக் தோல்வியுற்று ஒளிந்துகொள்ள இடந்தேடியலைவது காண — தத்தளித்தது ஆவேசத்தால்.

வெற்றிமீது கட்டப்பட்ட புதுச் சீனுவை — அங்கீகரிக்காததோடு, புதுச்சீனுவின் சார்பில் ஐ நா. சபைக்குப் பிரதிநிதி வரவும் அனுமதிக்கவில்லை. சியாங்—கேய்—ஷேக்கின் பிரதிநிதி இருக்க அனுமதித்தது.

நீதியை மீறும் இச்செயலைக் கண்டித்து, சீன தேசியப் பிரதிநிதி அனுமதிக்கப்படும்வரை தான் ஐ. நா. சபையின் கூட்டங்களுக்கு வர முடியாதென்று ரஷ்யா மறுத்துவிட்டது-புறக்கணித்து வருகிறது.

எனவே—ஆத்திரத்தால் ஆவேசங்கொண்ட அமெரிக்காவுக்கு தனது கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

இதன் விளைவாகவே 'கொரியா' — போர்ப்புயலுக்கு இலக்காகியிருக்கிறது.

கொரியாப் போர்—ரஷ்யாவின் சிருஷ்டியென்று முதலாளித்துவ செய்தி நிலையங்களும், பத்திரிகைகளும் அலறுகின்றன. ஆனால், செய்திகளையும் நிலைமையையும் சூழ்ந்து கவனித்தால் உண்மை விளங்கும்.

வடகொரியா—தென்கொரியாமீது படையெடுத்து விட்டது என்ற செய்தி பரபரப்போடு பிரசுரிக்கப் பட்டுவிட்டது. பத்திரிகையாளர் களும் வடகொரியாவின் போக்குக் குறித்து தலையங்கங்கள் தீட்டிவிட் டனர்.


"அமெரிக்கத்தூண்டுதலின் பேரில் வடகோரியாமீது படையெடுப்பைத் துவங்கியது தென்கோரியாதான்"

இந்த அறிக்கை வடகொரியப் பிரதமர் இம்-இர்-சேன் வெளியிட்டதாகும். இத்தகைய தகவல், வெளியிடப்பட்டு இருநாட்கள் கழித்த பின்னரே, எங்கும் பரப்பப்பட்டிருக்கிறது. இருநாடுகளுக்குள் போர் மூண்டதென்றால், இருநாடுகளின் தலைவர்களும் 'என்ன காரணங்களை வெளியிடுகிறார்களோ அதை நேர்மையுடன் வெளியிடவேண்டுமென்ற நியதிகூடப் பறந்திருக்கிறது!

இது ஏன்? — பயமா? — தங்கள் பிரச்சாரத்துக்குப் பங்கம் ஊட்டும் என்ற திகிலா?

ஆக்கிரமிப்பு யாரால்?

அதுமட்டுமல்ல, கீழே நாம் தந்திருக்கும் படத்தைப் பாருங்கள்.




செயோல்—தென்கொரியாவின் தலைநகராகும்—அங்கிருந்து அம்புக்குறி மூலம் காட்டப்பட்டிருக்கும் ஹிசீயூ நகரம் வடகொரியாவிலிருப்பதாகும்.

செயோலுக்கும் ஹிசீயூவுக்கும் இருக்கும் தூரம் 50 மைல்களாகும்.

வடகொரியப் படைகள் செயோலைத்தாக்கிய தினமே தென்கொரியப் படைகள் ஹிசீயூவைத்தாக்கினவாம் —அதுவும் சிதறுண்டு சென்ற ஒரு சேனை வடகொரியாவுக்குள் புகுந்து 50 மைல் தொலைவிலுள்ள அந்நகரத்தைத் தாக்கியதாம்.

இது எப்படி இயலும்? போர் துவக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்ட மறுதினம் வந்த செய்தி இது — ஏற்கனவே தென்கொரியப் படைகள் வடகொரியா நோக்கி தாக்க ஆரம்பித்திருந்தால் அன்றி இது எங்ஙனம் சாத்தியமாகும்.

வடகொரியப் படைகள், தென்கொரியத் தலைநகரைத் தாக்கு முன்னரே 'வடக்கு' நோக்கி தென்கொரியப் படைகள் புறப்பட்டிருந்தால்தானே இத்தாக்குதல் நடைபெற்றிருக்க முடியும்?

தகவல் — பலபத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது; கூர்ந்து கவனித்தால் 'அமெரிக்கப் பிரச்சாரப் பீரங்கி'களின் முரண்பாடு விளங்கும்!

அமெரிக்க ஆயத்தம்

கடந்த ஆண்டு அமெரிக்க இராணுவம் தென்கொரியாவைவிட்டு வெளியேறியபோது 250 கோடி ரூபாய் பெறுமான ஆயுதத் தளவாடங்களை அங்கேயேவிட்டு வந்தது— அதோடு, ஜப்பானிலிருந்தும்நிறைய இராணுவத் தளவாடங்கள் மக்-ஆர்தரால் அனுப்பப்பட்டிருக்கின்றன!

அது மட்டுமல்ல;

இந்தமாத ஆரம்பத்தில் மூவர் கமிஷன் ஒன்றை அமெரிக்கா ஜப்பானுக்கு அனுப்பியது — ஜப்பானுடன் சமாதான ஒப்பந்தம் குறித்துப் பேசப்போவதாக!

அவர்கள்,

இராணுவ காரியதரிசி ஜான்ஸன்.

பிரதம சிப்பந்திகள் அதிகாரி பிராட்லி.

ஹிட்லரின் பழைய நண்பர் டல்லஸ்.

இவர்கள்மூவரும் மக்-ஆர்தருடன் நீண்ட உரையாடல்கள் நடத்தினர்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கூர்ந்து நோக்கினால், அமெரிக்கா — தனது கவுரத்தைக் காக்க, கொரியாவைப் படைத்தளமாக்கத் திட்டமிட்டு வேலை செய்து வந்தது என்பது விளங்கும்!

அமெரிக்க அவசரம்!

சரியும் முதலாளித்துவம் சாகசத்தின்மூலம் கொரியாவை 'பாசறை'யாகச் சிருஷ்டித்திருக்கிறது.

உலக மக்கள்முன் திரை போடும் வகையில் ஐக்கியநாடுகள் சபைக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகக் காட்டிக் கொள்கிறது.

போர் துவக்கப்பட்ட செய்தி கிடைத்த 12 மணி நேரத்திற்கெல்லாம் ஐ. நா. பாதுகாப்பு சபைகூடி, வடகொரியாவின் போக்கைக் கண்டித்தது.

மறு, இருதினங்களுக்கெல்லாம் தென்கொரியாவுக்கு இராணுவ உதவி செய்யலாம் என்று தீர்மானம் செய்திருக்கிறது.

இந்த இரு தீர்மானங்களும் அமெரிக்கா கொண்டுவந்து நிறைவேற்றியவையாகும்.

காஷ்மீரப் பிரச்னை, இந்தோனேஷியத் தகராறு, பாலஸ்தீன் பரிதாபம், தென் ஆப்ரிக்கக் கொடுமை — இத்தனை பிரச்னைகள் ஐ. நா. சபைக்குப் போயிருக்கின்றன!

இவைகள் குறித்துச் சிறிதும் அவசரமோ அக்கறையோ காட்டாத அமெரிக்கா தென்கொரியா விஷயத்தில் மட்டும் 'உலக நேர்மை'யைக் காப்பாற்ற ஓடியாடிச் சபையைக் கூட்டவும், தீர்மானத்தை நிறைவேற்றவும் செய்திருக்கிறது!

'ரஷ்யப் பிரதிநிதி கலந்து கொள்வதில்லையே! செஞ் சீனப் பிரதிநிதிக்கு இடந்தர வேண்டுமே யென்பது குறித்து எண்ணி நியாயத்துக்கு வாதாடநேரத்தையும் நினைப்பையும் ஒதுக்காத இந்தியாவும் இந்த விஷயத்தில் 'ஐ. நா. சபை'யின் கவுரவத்தைக் காப்பாற்றப் போவதாக ஓடிவந்திருக்கிறது!!

நினைத்தால் வெட்கமும் சோகமும் வெடிக்கும். ஜம்பத்துக்கும், வீண் பெருமைக்கும் ஆட்பட்டுச் சிமானுடன் சேர்ந்து பயில்வான் மீது பாயச் சென்ற 'வீணன்' சிங்காரத்தின் கதை நினைவுக்கு வரும்!

'நடுநிலை' எங்கே?

போர்! போர்!! என்ற கூக்குரல்கள் எங்கும் எழும்பிவிட்டன.

(9-ம் பக்கம் பார்க்க)

# சூழல் விளக்கு

டிஸ்மிஸ்!

ரோம்நகரில், தன்கடமையைச் சரிவரச் செய்யத் தவறியதால் நகர மேயர் பதினைந்து தினங்கள் ஸஸ்பெண்ட் செய்யப்பட்டாராம். அப்படிப் பார்த்தால் நமது 'புண்ய பூமியில்' பரிபாலனம் நடத்தும் மந்திரிமார்களில் எத்தனை பேருக்கு ஆபத்து வரும்—ஸஸ்பெண்டு கூட அல்ல, டிஸ்மிஸ்!! கவிழாமல் இரயில்களை ஓட்ட முடியாத போக்குவரத்து மந்திரி, ரேஷனின்றி உணவுப் பொருள்களை இன்னமும் அளிக்காத உணவு மந்திரி, வெளிநாட்டு விவகாரங்களைக் கவனிப்பதென்றாலே, அங்கெல்லாம் சென்று உல்லாசப் பிரயாணம் நடத்துவது என்றிடும் வெளிநாட்டு மந்திரி......இந்தக் குணசீலர்களை, பதினைந்து தினங்களுக்கென்ன, ஆயுள் முழுவதுமே தள்ளிவைக்க வேண்டியது தானே!

காசு, கார்டு புராணம்!

'வரப்போகுதய்யே, புத்தம் புதிய நாணயங்கள், மெத்த விரிந்து, விலை நிறைந்த கார்டுகள்...' என்றுபாடல் கேட்கிறது! மன்னர் தலையுள்ள இடத்தில் அசோக ஸ்தூபி அமைக்கப்பட்டு, பம்பாய் நாணயச் சாலையில் அடித்துக் குவிக்கின்றனராம், நாணயங்களை. எருது, குதிரை எல்லாவற்றிற்கும் கும்மாளம்—நெற்கதிருக்கும் குதூகலம்! ஏன்? கால், அரை, ஒரு ரூபாய் நாணயங்களில் ஒரு பக்கம் ஸ்தூபியும், மறுபக்கம் நெற்கதிரும் இடம் பிடித்துவிட்டன. இரண்டணா, ஓரணா, அரையணா நாணயங்களில் ஒரு பக்கம் எருதுவாம், மற்றொரு பக்கம் ஸ்தூபியாம்! காலணாவில் மட்டும் ஸ்தூபியும், குதிரையும் ஆளையப் போகிறதாம். அடுத்த ஆகஸ்ட் 15-ல் வெளியிடப் போகிறார்கள், கவனம், கவனம்!

அடுத்த அக்டோபர் மாதம் முதல் தேதியிலிருந்து இப்பொழுதுள்ள சாதாரண கார்டைப்போல மூன்று மடங்கு பெரிய அளவில், விலை ஒன்றரையணாவில், கடிதக் கார்டுகள் வரப்போகின்றன. பேனாவைத் தீட்டி, 'பெரிய விஷயங்களை' நிறுத்தி வைத்திருங்கள்.

சாக்கிய நாயனார்!

பம்பாய் விவசாய மந்திரி எம். பி. பட்டீல், தனது காரியதரிசியுடன் மாரின் ட்ரைவ் வழியாகக் காரில் போய்க்கொண்டிருக்கும் பொழுது, கண்ணாடிகளைச் சிதறடித்துக் கொண்டு ஒரு கல் வந்து விழுந்தது—மந்திரி தப்பினார், காரியதரிசிக்கு மட்டும் காயம்! கல் வீசியவனைக் கைப்பிடியாய்ப் பிடித்துவிட்டார் மந்திரியார். "ஏனடா, அடித்தாய்?" என்றாராம், ஏழரை கட்டை ஸ்தாயில்! "அன்பால், ஆத்திரத்தாலல்ல!" என்றானாம், அந்த ஆமத் நகரவாசி—22 வயது நிரம்பிய இளைஞன். "என்ன...!" என்று கூவினார், மந்திரியார், ஆச்சர்யத்தால்! "கருணை மிக்க மந்திரியாரின் கவனத்தை இழுக்கக் கையில் கிடைத்த கல்லெடுத்து வீசினேன் — நீங்களே வந்துவிட்டீர்கள். எனக்கு வேலை வேண்டும், எம்பிரானே!" என்றானாம் அந்த 'நவீன சாக்கிய நாயனார்!' அன்பால் வீசிய கற்களை, மணம் வீசும் மலர்களாக மாற்றி மகிழ்ந்தாராம், மகேசுவரன்—மந்திரியாரும் அப்படித்தானே இதனையும் நினைப்பார்?

சிவலோக யாத்திரை

நாகூர் சிவன் தேரேறி வந்தாராம். சதாசிவம் என்று ஊரே அழைத்துவந்த ஒரு வாலிபனின் மீது தேர் ஏறி, அந்த இடத்திலேயே உயிர் நீத்து விட்டது கண்டு பக்தர்கள் அழுதனராம்—சிரித்தல்லவா இருக்கவேண்டும், சிவனருள் கிட்டி, சிவலோக யாத்திரைக்குப் போகும் பாக்கியம் கிடைத்ததே என்று—நல்ல பக்திப்போதை!

கோட்டயமாகட்டும்!

கோட்டயம் என்ற ஊரில் பிச்சைக்கார நிவாரண சங்கம் என்ற பெயரால் ஒரு அமைப்பு உருவாகி, அதன் மூலம், பிச்சைக்காரர்களையும், வீடு வாசல் இன்றி நிர்க்கதியானவர்களையும் தேடிப் பிடித்து ஒன்றுபடுத்தி ஒழுங்காக வாழ வழி தந்து காப்பாற்ற முயற்சி எடுத்திருக்கிறார்கள். 'கனம்களின்' சிந்தையில் படவேண்டிய இந்தப் பிரச்சினை — நம்மைப்போல சாதாரண சில 'இலேசுகளின்' இதயத்தைத்தொட்டிருக்கிறது மகிழ்ச்சியை அளிக்கிறது. நாடு முழுவதும் கோட்டயமாகும் நன்னாள் எந்நாள்?

அடித்தார் 'பல்டி!'

மலையாள மந்திரியார் மாதவ மேனன், காங்கிரஸ் கட்சியின் 'இமயத்துப் பேர்வழிகளில்' ஒருவர்—மந்திரியாக இருப்பவர். அவருக்குத் தகுதியில்லையென்று தீர்மானித்துவிட்டனர், கேரளமாகாண காங்கிரஸ் கமிட்டியில் இருப்பதற்கு! அடித்து விட்டார் 'பல்டி' நம் கல்வி மந்திரியார் — எப்படி அவரது அமோகமான செல்வாக்கு! அவர் தோல்விக்கு நம் ஆழ்ந்த அனுதாபம் — ஆயிரங்கோடி ஆறுதல்கள்!

அடிதடித் திருவிழா.

நாடெங்கும் காங்கிரஸ் பஞ்சாயத்து, மாகாண, மத்திய கமிட்டித் தேர்தல்கள்நடந்தபடி இருக்கின்றன. நாளும் பல ருசிகரமான தகவல்கள் வந்து குவிந்த வண்ணமே உள்ளன. வாய்ப் பேச்சிலிருந்து வெட்டு, குத்து வரை சென்றிருக்கின்றனர், அஹிம்சா பாதையிலிருந்து சிறிதும் நழுவாதவர்கள்! திருவாரூரிலிருந்து ஒரு செய்தி—மாதிரிக்காக — உள்ளூர் பெரிய பண்ணைக்குப் பரிந்துகொண்டு வேலை செய்த ஒரு 'தியாகியை' அந்தமாவட்ட 'வைரக் கடுக்கன்' தாறுமாறாகப்பேசி, தாக்குகிறேன், இடிக்கிறேன், புடைக்கிறேன் என்று ஏசல் அம்புகளை எண்ணிக்கையில்லாது விட்டாராம்! எப்படித் தடியடித் திருவிழா — அது தான் தேர்தல் உற்சவம்!

★

# மர மகோற்சவம்!

'என்னப்பா ஏகாதசி, இந்தப் பொல்லாத பசியைக் கொல்ல நல்லதொரு திட்டம் இல்லையா, இந்த தொல்லுலகில்...' என்று கவியப்பா நடையிலே கேள்வியைப் பூட்டிவிட்டான், மிஸ்டர் சிவன்ராத்திரி!

"போடா போ, புத்திகெட்டவனே, பெயருக்கேற்றாற் போலத்தான் உன் மூளையும் இருண்டு கிடக்குது" என்று, சிவன்ராத்திரியின் காதைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனான், தோழன் ஏகாதசி!

"பார்த்தியாடா, பரந்த வயல் வெளிகள்! இருந்தும் வரண்டு கிடக்குது. இதோ, இதுதான் வாய்க்காலுக்கென்று ஒதுக்கிவிட்ட இடம்—வெட்டி முடிக்கவேண்டும்! கலப்பைகள் இப்பொழுதுதான்செய்ய அனுப்பப் பட்டிருக்கின்றன. இனிமேல் தான் உழவு மாடு வாங்கியாகவேண்டும். எருவடிக்க இரட்டைமாட்டு வண்டி கடனாகக் கேட்டனுப்பியிருக்கு! இதுவரை வந்து சேரல்லே! விதை தூவ நெல் மணிகளைத் தேடிச்சேர்க்கணும். இத்தனை வேலைகளையும் செய்து முடிக்க ஆட்கள் வேணும். அதற்கும் அடுத்த பட்டிக்குச் சொல்லியனுப்பணும்!" என்று அடுக்கிக்கொண்டே போனான் ஏகாதசி.

"பசிக்கு ஒரு கவளம் கேட்டால், நீ பயிர்த் தொழில் பற்றிப் பிரசங்கம் பேசுவே போலிருக்கு!" என்று குத்தலாகச் சொன்னான் மிஸ்டர் இராத்திரி.

"அதுமட்டுமில்லேடா, இப்போ கேலியாகத்தான் பேசுவே! அப்புறம் நீயே என்னிடம் சத்திரத்துச் சோற்றுக்கு சரளி பாடப்போறே! இப்போ சொன்னதெல்லாம் முடிஞ்ச பிறகு பாரேன்—அன்ன வரட்சி சத்திரத்தை! அடுப்புப் போட்டாச்சி! விறகு வந்துகிட்டிருக்கு! பானை குயவனிடம்! ஆப்பை அடுத்த பட்டினக் கடைத் தெருவில்! காய்கறிகள் தோட்டத்தில்—கடை சரக்கு வாங்கப் பணத்திற்கு உண்டி குலுக்கணும்!' என்று மேலும் விடாது பேசினான் ஏகாதசி!

"இத்தனை காரியங்கள் முடிகிற வரை—அவர், அதான், உங்க வயிற்றப்பன் சும்மா இருக்கமாட்டானே! பொறுமையிழந்து புரட்சி செய்ய ஆரம்பித்து விடுவானே!"

"போடா, சிவன் இராத்திரி! பொறுத்தவர் பூமியாள்வார், பொங்கினவர்......"என்று முடிப்பதற்குள் ளாகவே சிவன் இராத்திரி நடந்துவிட்டான். அன்னவரட்சி சத்திரத்துத் திண்ணையிலே சாய்ந்துவிட்டான், ஏகாதசி, நீண்டதொரு பெருமூச்சை விட்டபடியே!

* x *

தென்னை மரத்துக்கு ஜே!
பனை மரத்துக்கு ஜே!
புன்னை மரத்துக்கு ஜே!
புளிய மரத்துக்கு ஜே!
மாமரத்துக்கு ஜே!
மந்திரி முன்ஷியாருக்கு ஜே!
மகாத்மா காந்திக்கும் ஜே!

மக்களுக்கு வாழ்வளிப்பதாக வாக்குறுதியளித்துவிட்டு மன்றமேறிய 'மஞ்சள் சர்க்கார்' மரங்களுக்கு 'தொண்டு' செய்யப்புறப் பட்டுவிட்டார்கள்!

காடுகளை வளர்க்கத் தேடிப் பிடித்துவிட்டார்கள், தெளிவுள்ளோர்—நீர்மானங்களை தீர்க்கமாக ஆலோசிக்கும் திறன் படைத்தோர் திடுக்கிடும் திட்டத்தை! போட்ட திட்டத்தை ஒரு இம்மியுந் தவறாது நடத்தியும்விட்டார்கள், அதன்பின் விளைவைச் சிறிதும் முன்கூட்டி யோசித்துப் பார்க்காமல்! பிறந்த அன்றே மரித்திடும் சிசுவாகிவிடுமே சிறிது கவனம் குறைந்தால், என்பதைத் துளியும் எண்ணிப் பார்க்காமல்! ஏற்றம் பெற்ற நாடுகள், தங்கள் விஞ்ஞானக் கரங்களைக் கொட்டி, விசித்திரக் கண்டுபிடிப்புகளாகிய விலாவெலும்புகள் வலிக்க வலிக்கச் சிரித்துச் செய்யும் கேலியையும், இண்டலையும் கடுகளவும் சிந்திக்காமல்!

சித்திரைப் பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், ஆடிப் பதினெட்டாம் பெருக்கு, ஆவணியில் ஸ்ரீ கிருஷ்ணஜயந்தியும், விநாயக சதுர்த்தியும், புரட்டாசியில் நவ இராத்திரி, ஐப்பசியில் தீபாவளி, கார்த்திகையில் கார்த்திகை தீபம், மார்கழி திருவாதிரை, தை பொங்கல், மாசியில் மகம், பங்குனி உத்தரம் என்று மாதத்திற்கோர் மகோற்சவம் நடத்தும் புண்ணிய பூமியாயிற்றே!

காஞ்சி கருடசேவை, காழி திருமுலைப்பால், கழுக்குன்றம் பறவை தரிசனம், திருவாரூர் தேர், திருவரங்கம் ஏகாதசி, திருப்பாதிரிப்புலியூர் வெள்ளி ரதம், திருவண்ணாமலை தீபம் என்று ஊருக்கொரு உற்சவம் நடத்தும் 'பக்தியாத்மாக்கள்' மலிந்த நாடாயிற்றே!

ஆகவே தான் வன மகோற்சவம் என்ற புதிய பெயரை பஞ்சாங்கம் புரட்டும் பக்கங்களில் உற்சவாதிகளின் அட்டவணையில் இணைக்கிறார் மந்திரியார் கனம் முன்ஷி. ஆம், இதனை இனி முன்ஷி மகோற்சவம் என்று அழைத்தாலும் ஆச்சரியமில்லை.

வன மகோற்சவமாம், விருக்ஷ விழாவாம், மரம் நடும் திருநாளாம் ......பல பெயரிட்டழைக்கிறார்கள்! இமயத்தின் அடியிலிருந்து, குமரிமுனை வரை, மரங்களை நடவேண்டும் என்று மக்கள் சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

ஜூலைத் திங்கள் முதல் வாரம் முழுதும் இந்த விழாவை நடத்த வேண்டும் என்று கட்டளைப் பிறப்பித்து விட்டார்கள்.

வீதிகள் முழுவதும் குழி பறித்துவிட்டார்கள் — வாரிகளிலே வெட்டிய குச்சிகள் — முனிசிபல் தோட்டிகள் நட்டுவிட்டனர். உயிர்த் தண்ணீர் ஊற்றியும் விட்டனர்!

நாட்டுக்கொரு மந்திரியார், ஊருக்கொருவர் வீதம் கட்சிக் கோமான்

களுடன் 'உபந்யாசம்' புரிந்தும் விட்டனர்.

மரம் நடும் விழா முடிந்துவிடும் ஆனால் இனி அதற்கு யார் நீர் விடுவது, யார் பாதுகாப்பு அளிப்பது என்று புரியவில்லை. பொதுமக்களை ஒத்துழைக்க அழைக்கிறது சர்க்கார்.

நல்ல காலம், வேலி கட்டும் விழா, தண்ணீர் பாய்ச்சும் உற்சவம், எரு போடும் இன்ப நாள் என்று ஆண்டு முழுவதும் 'மகோற்சவம்' செய்யாது தவறிவிட்டனர் சர்க்கார்! தப்பினர் மக்கள்!!

* * *

இத்தனை ஆர்ப்பாட்டங்களும் எதற்குத் தெரியுமோ? மழையைக் கொண்டு வரக் கண்டுபிடித்திருக்கிற மகத்தான உற்சவத் திட்டம்! இத்தோடு நிறுத்திக் கொண்டார்களே வனமகாராசனுக்குப் பொங்கலிட்டுப் படைத்து கும்பிடவேண்டும். மேகராஜனுக்கு யாகம் செய்யவேண்டும். வருணதேவனை 'வசியம்' செய்ய ஜெபம் புரியவேண்டும் என்று இணைக்காமல் விட்டார்களே!

காடுகளின்மையால் மழை குறைகிறது என்கிறார்கள், கொஞ்சம் விஞ்ஞான உண்மையைக் கூட்டிக்கொண்டு முழுக்க முழுக்க 'கற்கால்'க் கூத்தாடுகிறார்கள்!

இப்பொழுது வைத்திருக்கிற செடிகள் வளர்ந்து, மேகமண்டலங்களை அளாவளாவிப் பிறகு மழை பெய்யப் போகிறதாம்! இதைக் கேட்கிற சிறு குழந்தையும், தன் பிஞ்சுக் கரங்களால் வாயைப் பொத்திக்கொண்டு சிரிக்கும் எவ்வளவு தீவிரமான திட்டம்! உடனடிப் பிரச்சினையைத் தீர்க்கும் பெரு வழி—என்று பூரித்துப் போவர், புத்தியில் ஆதவர்கள்!

X X X

ஆளுக்கொரு காரணத்தை வீசியெறிந்திருக்கிறார்கள், இந்த வனமகோற்சவத்தில்! கேட்டுக் கிறுகிறுத்துப்போய்விட்டார்கள் மக்கள்!

ஒரு மரம் நடுகிறவன் நூறு குழந்தைகளைப் பெறுவோர் சுவர்க்கத்தில் அடையும் புண்ணியத்தை அடைவான் என்று உபநிஷத்து வரியைக் காட்டி உற்சாகப்படுத்தினார், வனமகோற்சவத்தின் ஆதிகர்த்தா, இந்திய சர்க்கார் விவசாய மந்திரி முன்ஷி.

பாலையை முல்லையாக்க வேண்டுமானால் மரம் நடுங்கள் என்று கூறினார் ஜனாதிபதி பிரசாத்.

மாங்கன்றை நட்டு மக்களுக்கு வழி காட்டி நின்றார் பிரதமர் நேரு.

ஸ்தல சீதோஷ்ண நிலையிலும், தண்ணீர் சப்ளையிலும், நதிகளிலும், மழை பெய்வதிலும், நிலத்தின் வளத்திலும், நிலத்தின் தரத்திலும் பாதகமான மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன என்று ஆயாசக்குரலெழுப்பி ஓய்ந்தார் முதன்மந்திரி ராஜா.

விவசாயமும் காடுகளும் ஒன்றையொன்று நம்பியிருக்கின்றன என்று தெரிவித்தார், சென்னை கவர்னர், கோவை காட்டிலாகா கல்லூரி பட்டமளிப்பு விழாவில்!

இப்படி ஆளுக்கொரு விளக்கம் சொல்லி ஒருவரையொருவர் மிஞ்சிவிடப் பாடுபட்டிருக்கின்றனர்.

ஒருவர் வனபோஜனம் சாப்பிட ஆசை—போஜனம் இருந்தும், வனமில்லையென்கிறார். இன்னொருவர், காடில்லாமையால், ரிஷிகள், மகான்கள் மறைந்துவிட்டனர் என்று அங்கலாய்க்கின்றார். காடாறுமாதம், நாடாறு மாதம் போக முடியவில்லையே என்று ஒரு நவீன விக்ரமாதித்தன் கோபிக்கிறார்—காடுகள் இருந்திருந்தால் வேட்டையாடலாம் என்று புலம்புகிறார், குருவி சுடும் துப்பாக்கி வீரர் — இப்படி — விரிவுரைகள், பல மூலைகளிலிருந்து, பல வடிவங்களில், ஒன்றையொன்று எட்டித் தொடக்கூட முடியாத மாதிரியில்!

X X X

"ஏனடி புளி, நம்மை நட்டு வைத்த புண்ணியவான் யாரடி?"

"அடி மா, அவன்தானடி தோட்டி தருமு"

"அவனை வைக்கும்படி ஏவிய பூபதி யாரோ!"

"அவர் டெயர் முன்ஷி"

"நடச் சொன்னது வரை சரி—நாளை முதல் நம்மைக் கவனிப்பவர் யார்?"

"மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றாமலா போய்விடுவான்"

"பாட்டிக் கதையடி அது, நட்டு வைத்த தோட்டிக்கு நாளை முதல் குப்பை அள்ளவும், சாக்கடைக் கும்பியை வாறவும்தான் சரியாயிருக்கும். ரோட்டோரமிருக்கும் நமக்கு அக்கரையாக யாரடி அனுதினமும் நீரூற்றி, எரு போட்டுக் காப்பாத்தப் போறா?"

"பொதுமக்கள்!"

"பைத்தியமடி உனக்கு — அவனவன் வீட்டிலேதானே வளர்ந்து கிடக்கும் நம்ம குலத்திற்கு உதவாத உதிரிகள்—இப்போ நமக்கு மட்டும் நன்மை செய்வாங்களா?"

"நாம்தான் மழையைக் கொண்டு வரப் போகிறோமே! அதற்காகவாவது — சுயநலத்தை எண்ணியாவது செய்ய மாட்டார்களா?"

"நாளைக்கு வருகிற பலாப்பழத்தைப்பற்றி கவலைப்படமாட்டார்கள். இன்று கிடைக்கிற களாக் காயையே மேலாக நினைப்பார்கள். இது மக்கள் சுபாவம் — மந்திரியாருக்கு இது தெரியவில்லை!"

"அப்போ இது வீண் வேலை என்று சொல்கிறாய்?"

"வீண்வேலை மட்டுமில்லை—விபரீதவேலை—விபரீதம் மட்டுமில்லை—விசித்திரவேலை—விசித்திரம் மட்டுமில்லை—வேதனை தரும் வேலை"

"அடி அம்மா, உன் ஓட்டை வாயை மூடடி உடனே! யார் காதிலாவது விழுந்து தொலைந்து விடப் போகிறது!"

பேச வாயிருந்தால், மாஞ்செடி இப்படிப் பேசியிருக்கும், புளியங்கன்று இந்த அரிய விளக்கம் தந்திருக்கும். அதனைக் கேட்டும் புரிந்து கொள்ளும் சக்தியிருந்தால் மரமகோற்சவம், நடந்திராது. நீர்த்தேக்கத் திட்டங்கள், அணைக்கட்டு அட்டவணைகளில் தங்கள் கவனத்தைத் திருப்பியிருப்பர் மந்திரிமார்கள்!

X X X

மழையில்லை காடுகள் வேண்டும் என்கின்றனர். சரி, ஒப்புக்கொள்வோம். மழைக்காகக் காடுகளை வளர்க்கப் புகுந்துவிட்டால், காடு வளர்ந்து கடுமழை பெய்கிறவரை மக்கள் இராம இலக்குமணர் விசுவாமித்திரரிடம் மந்திரம் கற்றனராமே பசியாதிருக்க, அப்படி வரம் பெற்று

(4-ம் பக்கம் பார்க்க)

# காகிதமும் ★ கருத்தும்

இரண்டு காரணங்கள் காட்டப் பட்டிருக்கின்றன, இந்திய அரசாங்கத்தால், தாங்கள் அண்மையில் காகிதப் பொருள்கள் மீதிருந்த கட்டுப்பாடுகளையெல்லாம் ரத்து செய்ததற்கு.

ஒன்று—இந்தியாவில் காகித உற்பத்தி முன்பைவிட அதிகமாகியிருக்கிறது என்பது.

இன்னொன்று — வெளிநாடுகளிலிருந்து தாராளமாக இறக்குமதியாகச் சலுகை தரப்பட்டிருப்பதால் அதிகமான காகிதம் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை.

இந்த இரு காரணங்களையும் காட்டி, விலைக்கட்டுபாடு உள்பட எல்லாவற்றையும் ரத்து செய்திருப்பது கண்டு சென்னை வியாபாரிகளிடையே கலக்கமும் கவலையும் உருவாகியிருப்பபதாக "மெயில்" பத்திரிகை நிருபர் அறிவித்துள்ளார்.

இந்தியாவில் காகித உற்பத்தி அதிகமாகியிருப்பதாக அரசாங்கத்தார் அறிவித்துள்ளனர்—உண்மைதான் இது; ஆனால், வடஇந்தியாவில்தான் காகித உற்பத்தியின்றிருக்கிறதேயொழிய இங்கல்ல — தென்னிந்தியாவில் அல்ல!

வெளிநாடுகளிலிருந்து காகித உற்பத்தி தாராளமாக இறக்குமதியாக இதுவரை சலுகை தரப்படாததாலும், அப்படி இறக்குமதியானவைகளின் விலை இந்தியப் பேப்பரைவிட அதிகமாகயிருப்பதாலும், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கே இப்போது கிராக்கியிருக்கிறது.

மின்சார சக்திக்குறைவு ஏற்பட்ட காரணத்தால் கடந்த சில மாதங்களாக மில்களுக்குத் தரப்பட்டுவந்த மின்சாரசபலை குறைக்கப்பட்டது. இதன் காரணமாக மைசூர் பேப்பர் மில்ஸ், புனலூர் மில்ஸ் ஆகிய முக்கிய தென்னிந்திய ஆலைகளால் அதிகஉற்பத்தி செய்யமுடியவில்லை. ஆந்திராவிலிருப்பதும் சென்னை சர்க்காரின் மேற்பார்வையில் இருப்பதுமான ஆந்திரா பேப்பர்மில்ஸ்—வியாபாரிகள் விரும்பும்படியான தினுசுகளை உற்பத்தி செய்வதில்லை.

ஆகவே, தென்னிந்திய வியாபாரிகள் ஐதராபாத்திலிருக்கும் சிர்புர் மில், வங்கத்திலிருக்கும் டிடா கூர் மில் முதலான இடங்களிலிருந்து காகிதங்களைத் தருவிக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

தென்னாட்டில் போதிய உற்பத்தி, சூழ்நிலை காரணமாக அதிகரிக்கவில்லையென்பதால் வடநாட்டிலிருந்து காகிதப் பொருள்களை வரவழைக்க வேண்டியவர்களாகின்றனர்—இங்குள்ளோர்.

ஆனால் வடநாட்டு ஆலைகளோ தங்கள் பிரதேசத்துக்கு எவ்வளவு தேவையோ அதைக் கவனித்துவிட்டுத்தான் பிறகு தென்னிந்தியாவின் கோரிக்கையைக் கவனிக்கிறது. இதன் விளைவாகப் பல முறை தென்னிந்தியாவின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் உற்பத்தி பெருகியிருக்கிறது என மத்திய அரசாங்கம் கூறியிருப்பதில் தற்போதுள்ள நிலைப்படி பார்த்தால், அது வடநாட்டுக்குத்தான் பொருந்தும். தென்னாடு, வடநாட்டை நம்பித் திண்டாடும் நிலையில்தானிருக்கிறது.

இறக்குமதியாகும் வெளிநாட்டுக் காகிதத்தின் விலை இந்திய காகிதத்தைவிட அதிகமாக இருப்பதால், அதிககிராக்கி இந்திய காகிதத்துக்கே ஏற்பட்டிருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து காகித இறக்குமதி செய்வதைப் பொறுத்த வகையில் இம்மாதமுதல்தான் சலுகை காட்டப்படப் போகிறது. ஆகவே தாராளமாகக் காகிதம் இறக்குமதியாகக் கிட்டத்தட்ட இன்னும் ஆறுமாதங்கள் பிடிக்கலாம்.

ஆகவே தற்போதுள்ள நிலையில் வெளிநாட்டு இறக்குமதி விரியும் என்று எதிர்பார்க்கமுடியாது—இதுவரை சர்க்கார் எவ்வளவு இறக்குமதி செய்யலாம் என்று முடிவுசெய்கிறதோ அவ்வளவுமட்டுமே அந்நிய காகிதம் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இப்போது ஜூலை முதல் இந்த நிபந்தனை சிறிது தளர்த்தப் பட்டிருக்கிறது.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான காகிதம் இல்லை.

தென்னிந்தியாவிலோ அதிக உற்பத்தி இல்லை.

உற்பத்தி செய்யும் வட இந்தியாவோ தனக்குப் பின்னரே தானதர்மம் என்றகொள்கையைப் பின்பற்றுகிறது.

அந்நியநாட்டிலிருந்து அதிக இறக்குமதியை உடனடியாக எதிர்பார்ப்பதற்கும் இல்லை.

இத்தகைய நிலையில், விலைக்கட்டுப்பாட்டையும் ரத்து செய்திருக்கிறது இந்திய அரசாங்கம்.

வெளிநாட்டிலிருந்து வரும் காகிதத்தின்மீதிருந்த விலைக்கட்டுப்பாட்டை கடந்த மாதம் சர்க்கார் ரத்து செய்தனர்—உடனே, அதன் விலை முன்பைவிட ஒன்றரைமடங்கு உயர்ந்திருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில், காகிதத் திண்டாட்டம் தென்னிந்தியாவைப் பாதிக்கும் நேரத்தில், காகிதவிலைக் கட்டுப்பாடும் 'காலாவதி'யாகிறது!

வடநாடு கருணைவைத்து அதிகப் பொருள்களை அனுப்பவில்லையென்றால், தென்னாட்டின் நிலை கவலைக்கிடமானதாகிவிடும். கள்ள மார்க்கெட் பெருத்துவிடும். கஷ்டங்கள் குவிய நேரிடும்.

எனினும், இதையெல்லாம் கவனிக்காததுபோல் இந்திய சர்க்கார் கட்டளை பிறப்பித்துவிட்டது—வட இந்தியாவில் உற்பத்தி பெருகியிருப்பதைக்காரணமாக வைத்து!

(7-ம் பக்கம் பார்க்க)






Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.